உ
வாழ்க உலகெலாம்
ஞானசம்பந்தம்
[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 பிலவ - ஆடி 10—8—61 இதழ் 9

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

தில்லியில் அருளிய உபதேசம்

"இறைவன் திருவருள் இருந்தாலொழிய எதனையும் வெற்றிபெறச் செய்ய இயலாது. நம் நாட்டில் தோன்றிய நாயன்மார்கள் முதலிய சான்றோர்கள் திருவருளை நம்பி வாழ்ந்தனர். இன்றைய உலகச் சூழ்நிலையிலும் இந்த நம்பிக்கையே வெற்றிதரும்" என்று தில்லித் தமிழ்ச்சங்கம் அளித்த வரவேற்பிலே தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளிய திருமொழி, தமிழகத்திற்கும் பாரதத் திருநாட்டிற்கும் மட்டுமின்றி அனைத்துலகிற்கும் விடுத்த நன்மொழியாகும். கெடுபிடிப்போர்ச் சிக்கலும்,

கிளர்ச்சியிலே நாட்டமும், மண்வேறியும் கொண்டு தத்தம் எல்லைகளை விரிவாக்கிப் பிறரை அடிமைகொள்ளும் மனப் பாங்கில் மகிழ்ந்துவரும் உலகப் பெருநாடுகள் உற்றுநோக்கி உணர்ந்து பயன்பெறவேண்டிய உண்மையைக் கூறித் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ. 1001 கட்டிட நிதியாகவும் உடன் குருநாதர் அவர்கள் அருளியிருக்கிறார்கள். கல்வி நிலையங் களிலும் இத்தகு நல்லடிப்படை மெய்மைகள் அறவழி வாய்மைகள், ஆன்மீக உயர் ஞானநெறிகள் கற்பிக்கப் பெறல் வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவில் பேசிய இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் டாக்டர். திரு. இராதாகிருட்டினன் அவர்கள், இக்கருத்துப்படப் பேசியுள்ள விரிவுரையையும் அறிவுலகம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். சமயத்தலைமை பூண் டுள்ள அருளாளர்களும், அரசியல் தலைமையேற்றுள்ள அறிஞர்களும் இவ்வாறு உலகிற்கு அவ்வப்போது உரைக் கும் உண்மை மொழிகளை மேம்போக்காக எண்ணி விட்டு விடுதல் தக்கோர் செயலாகாது. ‘திருவருள் நம்பிக்கை வேண்டும். ஈசனுக்கு மெய்யான அன்பு வேண்டும். உள் ளத்தில் அன்புடன் வழிபாடு முதலியன ஆற்றிப் பயன் கொள்ள வேண்டும்’ என்று தில்லிமாநகரிலே நம் தருமைக் குருமணி யருளிய நல்லுரையை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

இயற்கை சில ஆண்டுகளாகத் தன்வன்மை மென்மை களால் உலகை வாட்டியும் வளர்த்தும் வருகிறது. அண்மை யில் பெருமழை பெய்ததனுல் காவிரியில் பெருகிய நீரும், பம்பாய்ப் பகுதியில் பெருகிய நீரும் உடைப்புக்கள் பல வற்றை உண்டாக்கிப் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கலங்கச் செய்த காட்சி, கண்ணீர் விடத்தக்க ஒன்றுகும். தஞ்சையிலே, திருவையாற்றிலே, திருப்பனந்தாள் மருங் கிலே எங்கெங்கும் மக்கள் தண்ணீர் வெள்ளத்தால் தவித் தனர். திருவையாற்றுக் கோயிலிலும், திருபுவனம் கோயிலிலும், திருப்பனந்தாள் கோயிலிலும் வெள்ளத்தாற் துன்புற்ற குடிமக்கள் அடைக்கலம் புகுந்தனர்; இவை

நம் தருமையாதீனக் கோயில்கள் அல்லவா ? கஞ்சியும், பிரசாதங்களும், கன்றுகாலிகட்கு உணவும் தேவஸ்தானங் களில் வழங்கப்பட்டன. தன் மக்கள் படும் துயர்கண்டும் பொறுத்துக் கொள்வானோ இறைவன் ? அவ்விறைவனின் திருவடிவாய்த் திருமேனி கொண்டுள்ள குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் திருவுள்ளம் நெகிழ்ந்தது. ஆவன புரிந்து மக்கள் அவலம் துடைக்க ஆணையிட்டார் கள். மக்கள் மயக்கம் தெளிந்தனர். அல்லல் வந்துற்ற போது நல்லருள் புரிந்த ஐயாற்றரசனை - கம்பகரேசனை - செஞ்சடையப்பனைச் சிந்தை குளிர ஏத்தினர் ; இன்புற்றனர். திருவருள் நம்பிக்கையை எளிய மக்கள் இதயங்களிலே பதிப்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ ?

மெய்யன்பு மிக்க உள்ளங்களுக்கு என்றும் பழுது வாராது; அன்பின் உறுதி அவ்வுள்ளங்களை என்றும் காக்கும் அன்றோ? அந்த உறைப்பு - மாறாத மனத்திண்மை - எங்கும் பரவுதல் வேண்டும். இவ்வாறு தில்லிமாநகரிலே கயிலைக் குருமணிகள் அருளிய மெய்யுரை உலகம் உண்மையை உணர்தற்குப் பெருவாய்ப்பாயிற்று. கேதார நாதனைக் கண்டு, புட்கர நீராடிப் போந்த புண்ணியமூர்த்தி யின் திருவடிகளை உலகம் போற்றி வணங்கிப் பயனெய்து மாக. " ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க, வையக மும் துயர் தீர்கவே " என்ற ஞானத் திருமொழியை இந்நிலை யில் நினைப்பூட்டி, மீண்டும் நாட்டில் துயருற்ற பகுதிகளில் இன்ப நல்வாழ்வு செழிக்க வேண்டுமெனத் திருவருளை வேண்டுவதே நம் பிரார்த்தனையாகும்.

சிவஞான போதம்

கட்டுரை 30

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 8, பக்கம் 442 இன் தொடர்ச்சி)

ஏழாவது அதிகாரணம்

1. 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது' (இது சிவஞானபோத மூலத்தின் பகுதி).

2. அவை '(நீ ஐந்து கந்தம் எனக்கோண்ட மாயா காரியங்கள்) வெவ்வேறு பெயர் பேற்று நிற்றலான், மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது' (இது போழிப்புரை).

3. சிவஞானபோத வேண்பா :-

" கலையாதி மண்ணந்தம் காணில்அவை மாயை
நிலையாவாம் தீபமே போல—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தானத்தின் வேருகும் தான் "

சோல்வகை : (1) காணில் கலை ஆதி மண் அந்தம் ஆம்; (2) அவை மாயை நிலையாவாம்; (3) ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில்; (4) அது தீபமேபோலத் தனுவாம் ; (5) தான் அத்தின்வேறு ஆகும். (இவ்வாறு சிவஞான மாமுனிவர் சோல்வகை (அந்நுவயம்) சேய்தருளினர்). 'ஆம்' என்பதை மேலும் கூட்டினர்.

அவர் அதற்கேற்ப எழுதியருளிய சிற்றுரை :-

1. அங்ஙனம் சமுதாயம் ஆதற்கு உரியவை யாவை என்று அளவைகளால் அறியப்புகில், கலை முதல் நிலம் ஈருகிய தத்துவங்களே ஆம்.

2. அவை அனைத்தும் மாயையின் காரியங்கள் ஆகலின், நிலையுதல் இன்றிச் சிலகாலம் நின்று அழிவன வாம்.

3. அவை தோக்க சமுதாயத்தின் விளங்கித்தோன்றுவ தாய ஞானத்தின் இயல்பை அசையாமற் கருத்தை ஒருக்கி முன் உணர்ந்து பின் அச் சமுதாயத்தை யாது என்று ஆராயின்,

4. அச் சமுதாயம் கண்ணுக்கு விளக்குப்போல் உயிர்க்குத் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாம்.

5. ஆதலால், கண் விளக்கின்வேறு ஆயினாற்போல உயிர் அவ்வுடம்பின் வேறும்.

தடை :- உடம்பும் உயிர் அன்று. போறிகளும் உயிர் அல்ல. புரியட்டகதேகமும் உயிர் அன்று. பிராணவாயுவும் உயிர் அன்று. சித்தாகிய பிரமப்போருளும் உயிர் அன்று என நீ கூறியது ஒக்கும். உடம்பு முதலியவற்றுள் ஒவ் வோன்றே ஆன்மா ஆதல் இன்று என்றது உண்மையே. அவற்றுள் ஒன்று குறைந்தாலும் அறிவு நிகழாது. எல்லாம் ஒருங்கு கூடிய வழியே அறிவு நிகழும். அக்காரணத்தால் எல்லாம் ஒன்றுகூடிய சமுதாயமே உயிர் ஆகும். சித்தமும் சித்தப்பகுதியும் ஆகிய அகச்சமுதாயம் ஐந்தும் மாயா காரியம் என்பர். இஃது எம்மனோர்க்கு உடம்பாடன்று. அதுபற்றி ஆன்மா வேறுஉண்டு எனச்சாதித்தல் அமையாது. (சித்தம் - உருவக்கந்தம். சித்தப்பகுதி - வேதனை, ஞானம், குறி, வாசனை).

விடை :- நீ 'ஐந்துகந்தம்' எனக் கோண்ட மாயா காரியங்கள் ஆன்மா என்னும் பெயர் பேறுமாறில்லை. அவை வேறு வேறு பெயர் பேற்று நிற்பனவாகும். ஆதலால் மாயா காரியங்களால் யாக்கப்பட்டு இயன்ற சூத்திரப்பாவை போலும் உடம்பின்கண் அக்காரியங்களுக்கு வேறாய், ஆன்மா உண்டு. (ஐந்து கந்தம் :- (1) உருவக்கந்தம்

(2) வேதனைக்கந்தம் (3) ஞானக்கந்தம் (4) குறிக்கந்தம் (5) வாசனைக்கந்தம்).

[இங்கு 'யாக்கப்பட்டு' என்றதை ஆக்கப்பட்டு என்று கொள்ளின் குற்றம் ஆகும். அஃது எதுபோல்வது எனின் கூறுதும். யாப்பருங்கலக்காரிகையுரை, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகை யாப்பினுல் யாக்கப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்றதை ஆக்கப்பட்ட எனக்கொண்டு விளங்குகின்றது. அறம் முதலியன அந்நால்வகைப் பாக்களால் யாக்கப் படுவனவே அன்றி ஆக்கப்படுவன அல்ல. யாத்தலும் ஆக்குதலும் வெவ்வேருகும். அதுபோல்வது இக்குற்றம். காரிகைப்பதிப்பெல்லாம் இனியேனும் ஆடவர்பதிப்பாதல் நன்று. அதன் முதற்பாடல் உரையைக் கண்டு இப் பிழையைத் திருத்திக்கோடல் காரிகை வழிப்படும் இளைஞர் கடனுகும். அருங்கலம் தேடற்க; வழிப்படுத்த].

தடை :- அவை தனித்தனி வெவ்வேறு பெயர் பெற்ரு லும் அவை ஒருங்குதோக்க சமுதாயத்தில் ஆன்மா எனப் பெயர்பெறும் என்று கோள்வோம். அதுபற்றி இழுக்கு யாதும் இல்லை.

விடை :- 1. அவை வெவ்வேறு பெயர் பெறும் வழியும் நீயிர் கூறியவாறு பெயர் பெருமல் வேறு பெயர் பெறுகின்றன.

2. அவை அசத்தாகிய மாயாகாரியங்களே (சடம்). சித்தாகிய ஆன்மா ஆகமாட்டா.

3. அவை தோக்க சமுதாயத்திலும் ஆன்மா எனப் பெயர்பெறுதல் இன்று. வேறு பெயர் பெறும்.

இம் முத்திறக் கருத்தும் அவ்வெண்பாப் பொருளிற் காண்க. அவ்வெண்பா இக்கருத்து மூன்றனையும் உணர்த்தி, முன்காட்டிய ஏதுவாலும் மேற்கோளாலும் உணர்த்தப்பட்ட கருத்தையே வலியுறுத்திநின்றது.

மேற்கோள் :- ‘மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது’ என்றது.

ஏது :- ‘அவைதாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்ற லான்’ என்றது.

வெண்பாவிற்குச் செய்த சொல்வகையில் (அந்நுவயத் தில்) ‘தீபமேபோல அலையாமல்’ என்று இருந்தவாறே கொண்டு பொருள் உரைத்தல் சாலச்சிறந்ததாகும். ‘தீபமே போலத் தனுவாம்’ என்றது முனிவரது அதீதபுத்தியின் உதித்த பொருட்சிறப்பைக் காட்டுவதேயாகும். அஃது அவ்வெண்பாவை இயற்றியருளிய ஆசிரியர் கருத்தன்று.

தீபமே போல அலையாமல் ஞானத்தை முன் உணர்ந்து நாடுதல் தொன்றுதொட்டுச் சாத்திரக் கருத்தாக்கள் வற் புறுத்தும் உண்மைப்பொருள். அதுவே சம்பிரதாயமும் ஆகும். தீபம் அலையும். அதுபோல் அலைதல் இன்றி நாடுதல் வேண்டும். அதாவது சித்திர தீபம் போல அலையா மல் இருந்து நாடுதலாம். வேருதற்கு உவமம் தேடித் தீபத் தைப் பற்றல் வேண்டா.

தானம் - ஸ்தாநம். தான் - ஸ்தாநி. ஸ்தாநத்தின் வேருவது ஸ்தாநி. ஸ்தாநம் - தநு ; ‘மாயாயந்திரதநு’ ஸ்தாநத்தின் வேருகும் தான் (ஸ்தாநி) - அத்தநுவினுள் வேருய் நிற்கும் ‘ஆன்மா’. ‘ஸ்தாநம்’ ‘தானம்’ என் பன முறையே ஆரியச்சொல்லும் தற்பவமாகிய வடசொல்லு மாம். தான் அத்தின் வேருகும் என்று கொள்ளலும் அத் தானை அசைத்தாருக்குதலும் இத்தை மெய்யெனக் கருதிப் போலும்.

இதனுலே ‘தனி’ என்றதை வலியுறுத்தியவாறு.

மூன்ருவது சூத்திரம் முற்றிற்று.

இம் மூன்று சூத்திரத்தாலும் பதி பசு பாசமாம் முப்பொரு ளுண்மை அநுமான அளவையால் வலியுறுத்தப்பட்டது.

தடை :- ஆகமப்ரமாணமே அமையும். அநுமாநப்ரமாணம் அதிகமாகும்.

விடை :- அதிகம் ஆகாது. மந்தபுத்தியுடைய மாணுக்கர்க்கு, வேற்றுச் சமய சாத்திரங்களை நோக்கியபோது, சைவாகமப் போருளில் மலைவு நிகழலாம். (1) கேட்டல், (2) சிந்தித்தல், (3) தேளிதல், (4) நிட்டை என்னும் நான்கு வகையால் அன்றி ஆகமங்களைக் கேட்ட அளவாலே அநுபவம் உண்டாகாது : ஆகாமையின் அச்சாத்திரப்போருளைச் சிந்தனைசெய்து அவற்றின் வன்மை மேன்மைகளை உணர்ந்து தேளிந்து கோள்ளல் வேண்டும். அம்மலைவு நிகழாமற் போருட்டும் அத்தேளிவு நிகழ்தற்போருட்டும் அநுமாநப்ரமாணம் ஆவசியகமாம்.

பிரமாண இயல் முடிந்தது.

(தோடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

By the grace of God here I have been brought to this sacred Vaideeswaran Temple and enjoyed the blissful atmosphere here while having His Dharsan.

May those noble soul who are responsible for the preservation and maintenance of these sacred shrines be amidst us ever more to continue to hold high the heaven light of Hindu Religion through their praiseworthy manner of devoutly looking after His holy temple. This is my heart felt prayer at the feet of the lord on the occasion of my visit here.

Sadhu Dakshinamoorthi,
14—4—61 South Africa,

கம்பராமாயணத்தில்பாடவேறுபாடுகள்

பேராசிரியர்,

கோ. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L.,

இராமன் வரலாற்றைக் கம்பன் காவியமாகப் பாடினுன். அக்காவியத்தை நாம் கம்பராமாயணம் என்று வழங்குகிறோம். ஆனுல் கம்பன் தனது நூலுக்கு என்ன பெயர் கொடுத்தான் என்பதுபற்றித் திட்டமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. இராம கதை, இராமகாதை, மாக்கதை, இராமாவதாரம் என்று பலவாருகச் சொல்லுவர். ஆராய்ந்துபார்க்கில், இராமாவதாரம் என்பதே வலியுறும். எனவே இந்நூலின்பெயர்குறித்தே எத்தனையோ வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறே காண்டங்களின் பெயர்பற்றியும், படலங்களின் பெயர்பற்றியும் எண்ணிக்கை பற்றியும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. பாடல்களை எடுத்துக்கொண்டால், பலபாடல்கள் இவை கம்பன் பாடியவையா அல்லது இடைச்சேருகலா என்ற ஐயத்தை எழுப்பிநிற்கும். இவற்றையும் தாண்டிச்சென்ருல் ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொருவரியிலும் ஒவ்வொரு சீரிலும் பலவான வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில பாடல்களில் பாட்டு முழுதுமே உருமாறிக்கிடக்கும். முதலெழுத்துத்தவிர மற்றையவெல்லாம் வேறுபட்டுக் காணப்படும் பாடல்களும் சில ஏட்டுச்சுவடிகளில் நான்பார்த்து வியப்படைந்திருக்கின்றேன். ஒரு போலிப்புலவர் கம்பன் பாடற்கருத்துக்களை வைத்துக்கொண்டு தாமாகவே எல்லாப் பாடல்களையும் தெளிவாக எளிதாகப் பாடி முடித்து விட்டார் என்று தெரியவந்தது. அவ்வேட்டில் இராமாயணக் கதை இருக்கும்; ஆனுல் கம்பன் கவிச்சுவை இருக்காது. அதைக் கம்பராமாயணம் என்று சொல்லமுடியாது. வம்பராமாயணம் என்றுதான் சொல்லவேண்டும். இதுபோன்ற ஏடுகளையும் போலிப் பாடங்களையும் கண்டு மக்கள் ஏமாந்துவிடலாகாது.

திருச்சி வானெலியின் இசைவு பெற்றது.

தமிழ் மொழியில் வேறு எந்த நூலிலும், இராமாவதாரநூலைப் போல் பாடவேறுபாடுகள் காணப்படவில்லை. இவ்வாறு வேறு பாடுகள் தோன்றக் காரணம் என்ன ?

கம்பன் காவியம் பாடிய நாள்முதலே அந்நூலை யாவரும் விரும்பிக் கற்கத்தொடங்கினர். அந்நூல் சுரக்கும் இராமனது பரக்கும் தொல்புகழமுதினை யாவரும் பருகுவாராயினர். கம்பனின் செஞ்சொற் கவியின்பம் யாவர் உள்ளத்தையும் கவர்ந்தது. சமயத்துறையிலுள்ளோரும் இராமாயணத்தை விரும்பிக் கற்றனர்; இலக்கியச் சுவையில் ஈடுபட்டோரும் அந்நூலை விரும்பிக் கற்றனர். சாதி சமய இன வேறுபாடின்றித் தமிழர் அனைவரும், முதியரும் இளையரும், பண்டிதரும், பாமரரும் படித்தனர், தாமாகவும் படித்தனர்; கற்றுச்சொல்லவும் கேட்டனர். சைவரும் கற்றனர், வைணவரும் கற்றனர் பிற சமயத்தோரும் கற்றனர். ஊர்தோறும் இராக்காலங்களில் பௌராணிகர்களைக்கொண்டு கம்பராமாயணத்தைப் பாடிப் பொருணயங்களை விளக்கச்செய்தனர். இது பிரசங்கிகளுக்கு நல்ல பொருள் வருவாயையும் அளித்தது. அதனால் தமிழ்நாட்டில் பல புலவர்கள் சுவடி பாராமல் ஒப்பிக்கும் அளவுக்குக் கம்பன் நூலை மனப்பாடம் செய்துவைத்திருந்தனர். குமரகுருபரர் போன்றோர் வடநாட்டுக்கும் சென்று கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மக்களைக் களிப்பூட்டியதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு கம்பராமாயணம் முழுதையும் மனப்பாடம் செய்துவைத்துக் கொண்டு ஊர்தோறும் சென்று பிறர்க்கெடுத்துரைத்துப் பொருளும் புகழும் ஈட்டிவந்த நாவலர் பாவலர்கள் கற்றுச் சிறந்த புலமைமிக்கோராயும் இருந்தார்கள். அவர்கள் பல பாடல்களைக் கம்பசூத்திரங்கள் என்று தங்கள் அறிவுத்திறமைகொண்டு விளக்கம் காட்டி வியப்பூட்டி மக்களை மகிழச்செய்தனர். அவ்வாறு செய்யும் பொழுது இடையிடையே தங்கள் சொந்தச்சரக்குகளையும் கம்பன் காவியத்தில் கலப்பாராயினர். இவ்வாறு புலவர்களுக்குள் ஒருவரையொருவர் மிஞ்சக்கருதி ஏற்பட்ட போட்டியால் மூலபாடம் உருமாறிக்கொண்டே வரலாயிற்று.

இப்புலவர்கள் நினைவிலிருந்து சொல்லிவந்த மூலபாடத்தை அவர்களைச் சூழ்ந்திருந்த கற்றுச்சொல்லிகள் ஏட்டுச் சுவடிகளில் எழுதி எழுதிப் படிகள் எடுத்துவந்தனர். அவற்றில் மறதியாலும் அறியாமையாலும் அகந்தையாலும் பல தவறுகள்

ஏற்படலாயின. பாட வேறுபாடுகள் பல்கின. தம்மால் ஏற்படும் பிழையை ஒத்துக்கொள்ள மனமில்லாதோர், அப்பிழைக்கு ஏற்ப மற்றும் சில நல்ல உண்மைப்பாடங்களை வேண்டுமென்றே திருத்தித் தமது அறிவின்றலை நிலைநாட்டத் தலைப்பட்டனர். 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்ற நிலை ஏற்பட்டது.

அச்சுயந்திரம் வருமுன் நூல்கள் ஓலைச்சுவடியில் எழுத்தாணிகொண்டு எழுதப்பட்டன. அப்படி எழுதும்போது ஒற்றெழுத்துக்களுக்குத் தலையில் புள்ளியிடுவதும், எகர ஏகார, ஒகர ஓகார உயிர்களுக்கும், உயிர்மெய்களுக்கும் வேற்றுமை தெரியும்படி வரிவடிவு அமைப்பதும், கா, சா முதலிய உயிர்மெய்களில் நெடில் என்று காட்டும் குறியீடாகிய (ா) காலுக்கும் இடையின ரகரத்துக்கும் வேறுபாடு தோன்றும்படி எழுதுவதும் இல்லை. மற்றும், பக்கம் என்பது பககம எனவும், கோல் என்பது கோல எனவும், தாம் என்பது தாம எனவும் எழுதப்பட்டிருக்கும்.

பெரும்பாலும் ஒத்த ஒலியுடைய ல, ழ, ள என்ற எழுத்துக்களும், ந, ன என்பனவும், ர, ற என்பனவும் ஒன்றிருக்க வேண்டிய இடத்தே மற்றொன்று இருக்குமாறும் எழுதப்பட்டிருக்கும். அன்றியும், பெரும்பாலும் ஒத்த வடிவுடைய எழுத்துக்களாகிய க, ச, த என்னும் எழுத்துக்களை முன்னேயுடைய சொற்கள், கலம் - சலம் என்றும் தலம் என்றும் படிக்கப்பட்டும், கரம் - சரம் என்றும் தாம் என்றும படிக்கப்பட்டும், தலை - கலை என்று படிக்கப்பட்டும் பிழைபட எழுதப்படுவதுண்டு. பழம் - பளம் எனவும், வாழை - வாளை எனவும், சிறப்பும் பொதுவுமாகிய வேற்றுமை தெரியாதாராலும், வேற்றுமை தெரியாதார் படிக்கக் கேட்பவராலும் எழுதப்பட்டுப் பிழைபடுவதும் உண்டு. போற்றினன் - போத்தினன் எனவும், சாற்றினன் - சாத்தினன் எனவும், ஏற்றினன் - ஏத்தினன் எனவும் தம்முள் மாற்றி எழுதப்பட்டிருக்கும். நன்கு கற்றவர்களே அன்றிச் சிறிது பயின்ற அளவில் நன்கு எழுதப்பழகிக் கொண்டவர்களும் நூல்களைக் கூலிக்கு எழுதுவாராயினர். சிறிது பயின்றவர்கள் எழுதும்பொழுது தாமே மூலநூற் சுவடிகளைப் பார்த்து எழுதுவதும், பிறர் படிக்கக்கேட்டு எழுதுவதும் உண்டு. இவ்வாறு பிழைகள் ஓலைச்சுவடிகளிற் புக இடம் உண்டு. இனிப் பாடமாற்றம் வந்தவாறு கவனிப்போம்.

ஒற்றெழுத்துக்களுக்குத் தலையிற் புள்ளி வைப்பதில்லை என்றேம் அல்லவா? கா, கோ முதலிய நெட்டெழுத்தின் குறியீடாகிய காலுக்கும் ரகரத்துக்கும் வேற்றுமை தோன்ற எழுதுவதில்லை. அந்தமுறையில் ஒரு பாடவேறுபாடு வருமாறு:-

பேர்வான் என்பது ஏட்டில் பொவான என்று எழுதப்பட்டிருக்கும். இதனை, போவான் எனவும் பேர்வரன் எனவும், பேர்வான் எனவும் படிக்கலாம். ஆயினும் இடத்திற்கு ஏற்றவாறு பொருள் அமையும்படி படிக்கவேண்டும். எடுத்துக்காட்டாகக் கம்பனிலிருந்து ஒன்று காட்டுவோம். யுத்தகாண்டம், இரணியன் வதைப்படலம் 129 ஆம் செய்யுளில் '' பேரடா நின்றதாளோடு உலகெலாம் பெயரப் போவான் '' என்று அச்சுப்புத்தகங்களில் உள்ளது. இவ்வடியின் ஈற்றிலுள்ள போவான் என்பது ஒருவாறு பொருளியைபு உடையதுபோற் காணப்படினும் அச்சொல்லை, பேர்வான் என்றும் ஏட்டெழுத்து முறையிற் படிக்கலாமன்றே? அவ்வாறு கொண்டு, ''பேரடா நின்ற தாளோடு உலகெலாம் பெயரப் பேர்வான் '' என்று படிக்குங்கால், மோனை நயமும் பொருட் சிறப்பும் எத்துணை மிகுகின்றன என்பது சொல்லவேண்டுவதன்று. மேலும் பேர் என்ற மூலம் ஒன்றையே கொண்டு பெயரப் பேர்வான் என எச்சமும் முற்றும் தோன்ற அமைத்த நயமும் நோக்குங்கால், போவான் என்பது பேர்வான் என்றே படிக்கப்படவேண்டும் என்பது புலப்படும்.

இனி போவான் - போனுன், செல்வான் - சென்றுன், சொல்வான் - சொன்னுன் என்பனபோல்வன, சீர்முறையில் ஒத்த அளவுடையன ஆதலின், நினைவுகொண்டு எழுதுங்கால், போவான் - போனுன் எனவும், செல்வான் - சென்றுன் எனவும், சொல்வான் - சொன்னுன் எனவும் மாறிவருதலும் உண்டு. இது போன்று ஒத்த ஓசையுடைய சொற்களாலும், ஒத்த ஓசையுடைய வேற்றுமை யுருபுகளாலும், அரச, நிருப போன்ற ஒத்த ஓசையுடைய பரியாயச் சொற்களாலும், மலை - கிரி - வரை போன்ற ஒத்த சீருடைய பரியாயச் சொற்களாலும், பொருள் தெரியாமையால் பொருள் தெரியும்படி நெடும் - தேடும் என்று மாற்றியமைப்பதாலும் பாடபேதங்கள் ஏற்படுவதும் உண்டு.

(தொடரும்)

மருத நாட்டு மங்கை

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன். B. A.

(மலர் 20, இதழ் 8, பக்கம் 473 இன் தொடர்ச்சி)

'' அரண்மனைக்குப் புறப்பட்டு விட்டீரோ ? ஆம் ;
அன்போழுக அழைத்துவிட்டால் வாரேனே நான் ?
முரண் உடைய சிறுமியென நினைத்தோ, தந்தாய் !
முனிவுற்றீரோ '' என்று இனிமைச் சோல்லால்
உரங்கோடுக்கும் தமிழ்ச்சோல்லால் கோஞ்சிப் பேசும்
ஒருமகளின் புறம்நீவி, '' கண்ணே ! ஆமாம் ;
அறக்கோயிற் கேகுகின்றேன் ; பேச்சில் வேல்ல
ஆருன்னை ஒத்திடுவார் ? ஓ ஓ ! நின்றால் 19

நேரத்தைத் தடுத்திடவோ முடியும் '' என்று
நிகழ்த்தியநல் மதியமைச்சர் சட்டைமாட்டி
ஆரத்தை இனிதமைத்துத் தலையில் வண்ண
அழகுடைய தலைப்பாகை அமைத்து விட்டு
சாரத்தைப் போதிந்ததமிழ்க் கவிதை போலே
சரிநிகரில் லாதபேரு மிதத்தி னோடு
தாரணிந்து நடைவிரித்தார் ; குமுத வல்லி
தாய்மையன்பு குழைந்திடத்தன் மகளை நோக்கி ; 20

'' இளநிலவே ! தேன்மோழியாள் எங்கே சென்றாள் ?
இருவருமாய்ச் சோலைக்குச் சென்றீ ரன்றோ ?
தளரிடையும் மேல்லடியும் நோவச் சேன்று
தனிமையில்நீ வந்தாயே '' எனலும், சேல்வி
'' முளரிமலர், சண்பகமும், தவள முல்லை
முழுமலரும் பறித்துவந்த போதில், அம்மா !
உளருநறுங் குழலாளை இல்லத் திற்கு
உவந்தழைத்துச் சென்றுவிட்டாள் அன்னை '' என்றாள்.

" தேன்போன்ற சொல்லுடையாய் ! உன்னைப் பெற்றுத்
தேயமிதிற் பெருமைகொளுந் திறமும் பெற்றேன் ;
வான்நிலவே ! தமிழ்பயின்று வரலால் நீயும்
வளர்கின்றாய் தமிழ்போல் "என் றுரைத்த அன்னை
மீன்விழியாள் தனைத் தழுவி விரல்க ளாலே
மேற்புறத்துக் கருங்குழலை நீவி நிற்கப்
பான்மொழியோ " அம்மா ! உம் அறிவுச் செல்வம்
படிப்பைவிடப் பெரிதெனக்கே இனிக்கும் ' என்றாள். 22

" அழகாகத் தமிழ்க்கல்வி பயின்று நிற்க
அரியபல நல்வாய்ப்பு அருளி நின்றீர் ;
அழகாகச் செந்தமிழின் நூல்க ளூடே
அறிந்துலவி மகிழ்ந்திடநல் லாசான் தன்னைப்
பழகுறுநற் றுணையாக்கி விட்டீர் அம்மா !
பாலென்று லும்மெனக்குக் கசக்கும் வண்ணம்
அழகார்சேந் தமிழ்ச்சுவையைத் தந்தீ ரென்றால்
அதுவன்றோ நான்பெற்ற பெரும்பே " றென்றாள். 23

எழுந்ததொரு முழக்கத்தைத் தெருவிற் கேட்டு
இருவருந்தம் உளநடுங்கி மயங்கி விட்டார் ;
விழுந்ததொரு பேரிடியோ எனமுழங்கும்
வெல்முரசப் பேரொலியோ விண்ணைத் தாக்கும் ;
கொழுந்துமதி யிரண்டாகிப் பூத்ததே போல்
குமுதவல்லி தன்மகளி னோடேயந்த
அழுந்துமணிச் சாளரத்தே முகத்தைச் சேர்த்தி
அழகுடனத் தெருப்புறத்தே நோக்க லானாள் ! 24

கொடியுயர்த்துப் பலபேர்கள் ஆணும் பெண்ணும்
கூடியெழுந் தார்த்தபடித் திரண்டு சென்றார் !
படியெழுந்து முழங்குகடல் ஆரவாரப்
பரிசிதென முழங்கியவம் மொழிகள் யாவை ?
" குடிமக்கள் நலங்கருதாக் கொள்கை யாளர்
குணமில்லாப் படைத்தலைவர் வீழ்க " என்று
அடிவயிற்றி னெழும்பிவரும் குரலால் அங்கே
ஆர்த்தெழுந்து விரைந்ததந்த மக்கள் கூட்டம் ! 25

பெற்றவள்தன் மகள்முகத்தைப் பார்த்தாள் ; அந்தப்
பேரெழிலின் பாவையும்தாய் முகத்தைப் பார்த்தாள் !
மற்றதுதான் என்னேயென் றெண்ணும் எண்ணம்
மல்கிடுமவ் விருமுகத்தும் ; தெளிவைக் காணுர் !
" முற்றுமிது போலேநான் கண்ட தில்லை ;
முடிந்ததென்ன ? படைத்தலைவர் வீழ்க என்ருல்
சற்றுமிதன் பொருளறியேன் ; யாவர் செய்தார் ?
சதியுரைத்தார் எவரேயோ ? மகளே ! " என்று. 26

அன்னையடுக் கியமொழிகள் தம்மைக் கேட்டு
அதிர்ந்துவிட்ட கனிமொழியாள் " அம்மா ! இங்கு
முன்னெழும்பும் கலாந்தன்னை முடுக்கி விட்ட
முழுநிகழ்ச்சி அறியோமே ? என்ன மாற்றம் !
அன்னையெனக் குடிகள்மனங் கோணு வாறு
அரசுபுரிந் திடுந்தலைவர் உள்ளம் போலே
நன்னயத்து டன்வாழும் படைத் தலைவர்
நன்னெறிக்கோ எதிர்ப்பென்ருல் நம்ப மாட்டேன் ! ' 27

என்றுரைத்த திருமகளை அணைத்த வண்ணம்
எழில்மஞ்சத் தருகுவந்த குமுத வல்லி
நன்றுவிளங் கிடும்தமது மருத நாட்டு
நலம்குலைக்க வந்தவர்யா ரென்ற எண்ணம்
துன்றிடுசிந் தனையோடு நடக்க லாஞள் ;
துடியிடையும் நாட்டினுக்குள் நிலையை நெஞ்சில்
ஒன்றிநினைந் திருந்தாளப் போது கோயில்
ஓங்கார ஓசைமணி ஒலித்த தாமே. 28

3. காட்டிலே நடந்தது

எங்கெங்கும் மரங்கள்;செடி கொடிகள்; எங்கும்
இருளடைந்து கிடக்குமந்தக் கானகத்தே
மங்கியசிற் ருெளிக்குள்ளே ஒளிந் தொளிந்து
மறைத்துடலைத் துணியொன்ருல் இறுக மூடி
அங்கிங்கே பார்த்தபடி உருவம் ஒன்று
அமைதியின்றிப் பறந்துவந்து காட்டி னுள்ளும்
செங்குத்தாய் நின்றவொரு பாறைப் பக்கம்
சேர்ந்தவுடன் துணிவிலக்கி விட்டபோது, 29

அந்திவேயில் ஒளியினிலே அந்த வீரன்
　　ஆண்மைசேறிந் திடுமுடலம் விளங்கி நிற்க,
முந்திநிறைந் திடுங்குடுமி ; குண்டலங்கள் ;
　　முறுக்கிவிட்ட மீசை ; திரண்டேழுந்த தோள்கள் ;
புந்திநலம் தனைக்காட்டும் விழிகள் ; வீரப்
　　புதுமைநேறி கூட்டுமுடை வாளும் கையும் ;
சிந்தனைதோய்ந் திடுவானாய் நின்று, யாரோ
　　சேய்மையிலே வருவதனைக் கண்டோளித்தான். 30

வந்ததுயார் ? மேனியேல்லாம் திருமண் சார்த்தி
　　வனப்புறவே திருநாமம் பலதுலங்க
சந்தனமும் நறுமணஞ்சேர் சாந்தும் பூசிச்
　　சரிந்ததோரு தோங்தியிலே பூணூ லாடக்
கோங்குமலர் கோண்டையிலே குடியிருக்கக்
　　குலவுகின்ற திருமுகமோ கபடம் கூற
வந்ததந்தத் திருமாலின் அடியான் ; நின்று
　　வாயிருகை வைத்தோலியால் குறிப்புச் சேய்தான். 31

காடேல்லாம் ஒலித்ததந்தக் குறிப்பின் ஓசை ;
　　கடுவிசையாய் மறைந்திருந்தோன் ஓடி வந்தான் ;
" காடேல்லாம் சுற்றியிங்கே வருவ தற்குள்
　　காலந்தாழ்த் திடுதற்கு அரசே ! என்னைப்
பீடேல்லாம் போருந்தியதம் திருவுள்ளத்தால்
　　பெருமைபேற மன்னிக்க வேண்டும் " என்று
ஏடேல்லாம் கற்றவன்போ லிருந்த அந்த
　　எழில் அடியான் தோழுதிருகை குவித்து நின்றான். 32

" வச்சிரவேள் ! உன்வருகைக் காக விங்கே
　　வந்துசில நேரமே ஆயிற் றேனும்,
அச்சமில்லை ; ஐயுற்றேன் ; மருத நாட்டோர்
　　ஆரேனும் உனையறிந்து கோண்டாரோ ? என்
இச்சைநிறை வேறுதற்குத் தடையும் உண்டோ ?
　　என்றேண்ணி யலமந்தேன் ; விளைவு என்ன ?
மேச்சுபுகழ் மகதத்தின் ஆட்சிக் குள்ளே
　　மேன்மைநிறைந் திடநாட்டைக் கோணரு தற்கே. 33

(வளரும்)

திருக்களிற்றுப்படியார்

பண்டித, வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 20, இதழ் 8, பக்கம் 446 இன் தொடர்ச்சி)

நூலின் அமைப்பும் நுவலும் பொருளும் :— இந்நூல் நூறு திருவெண்பாக்களையுடையது. 1—14 திருப்பாடல்கள் இறைவனின் தோன்மைத் திருக்கோலத்தினையும், அவனே குருவாக எழுந்தருளி ஆட்கொள்கின்றான் என்ற உண்மையையும், அக்குருவருளின் வழி நிற்றலால் உயிர்கள் சிவஞான விளைவினைப் பெறும் என்பதையும், அவ்விளைவு பெற்ற சிவ ஞானிகள் மாண்பினையும் விளக்குவதாகும். 15ம் திருப்பாடல் இறைவனைத் தலைப்படுதற்கான உபாயங்கள் சிவதன்மம், சிவ யோகம், சிவஞானம் என்னும் மூன்றும் என்றும், அம்மூன்றினை யும் தற்போதம் இழந்து செய்தல் வேண்டும் என்றும் கூறு கின்றது. 16—21 வரையுள்ள 6 திருப்பாடல்களில் சிவதன்மப் பகுதி கூறப்படுகின்றது. 22—36 வரையுள்ள 15 திருப்பாடல் களில் சிவபோகப்பகுதி கூறப்படுகின்றது. 37—88 வரை யுள்ள 52 திருப்பாடல்களில் சிவஞானப் பகுதி கூறப்படு கின்றது. 89—100 வரையுள்ள 12 திருப்பாடல்களில் ஞான குருவின் மேன்மையும் தமது ஆசிரியர்க்குச் செய்யும் நன்றி யறிதலும் கூறப்படுகின்றன.

இறைவனின் திருக்கோலம் :- இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பெருங்கருணையால் உயிர்களை ஈடேற்ற நினைக்கின்றான். நினைக்கின்ற அவதாரத்துக்கொள்ளும் திருமேனிகளை 'நவந்தரு பேதம்' எனக் குறிப்பிடுவர். அவ்வொன்பான் வகைகளுள் ஒன்று சதாசிவத் திருமேனியாகும். சத்தியும் சிவமும் கூடிய திருமேனி சதாசிவத் திருமேனியாகும். இத்திருமேனியின் ஆணையினாலேயே அகில உலகும் இயங்குகின்றது. ஆதலின் 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக' என இந்நூல் தொடங்கிற்று. உயிர்கள் தாம்பயின்ற நற்றவத்தாலே

இறைவன் இத்திருமேனிகொண்டு எழுந்தருளி அவ்வுயிர்களை ஆட்கொள்வன் ஆதலின் 'அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்'என்றார். ஞானசம்பந்தப்பெருந்தகையாருக்கு அருள் செய்ய எழுந்த திருவடிவம் இதுவேயாகும். தோடுடைய செவியன் எனத் தொடங்கும் முதல் திருமுறையின் முதற்பாடல் அவர்தம் அநுபவத்தை விளக்கிக் காட்டுகின்றது. அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் என்பதைப் "பந்தணை விரலியும் நீயும் நின்னடியார் பழங்குடில்தோறும் எழுந்தருளிய பரனே" என திருவாசகத்தும் குறிக்கப்படுதல் காணலாம். மணிவாசகர் பிறிதோரிடத்தும் இத்திருக்கோலத்தைத் தொன்மைத் திருக்கோலம் என்று குறிப்பிடுவர். அப்பெருமான் எல்லாவுலகங்களையும் தன் நினைவு மாத்திரத்தால் இயங்கச் செய்தும் அவற்றில் தோய்வின்றி விளங்குவன். அப்பெரியோனையே அன்பு செய்து வழிபடவேண்டும் என்பது குறிப்பு.

அருளிச்செய்கை :- ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக் கூறுடை மங்கையுந் தானும் ஆக எழுந்தருளி வருவான் என்பது இதுகாறும் கூறப்பட்டது. அப்பெருமானே குருவாக எழுந்தருளினாலன்றி ஆகமங்கள் அறுசமயமோ யோகங்களோ உணர்வோ ஒன்றுமில்லை. அங்ஙனம் எழுந்தருளும் ஞானாசிரியனை இறைவனேயென வழிபட்டுய்தல் வேண்டும்.

சிவதன்மம் :- சங்கரனை அடையும் நன்மார்க்கம் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியை, கிரியை இரண்டினையும் சேர்த்து இவ்வாசிரியர் சிவதன்மம் என்பர். ஏனைய யோக ஞானங்களை முறையே சிவயோகம் சிவ ஞானம் என்று கூறுவர்.

சிவதன்மம் மேல்வினையென்றும் வல்வினை என்றும் இரு வகைப்படும். மேல்வினை - எளிதான வினையை மேல்வினை என்பர். புலவர் தன்முன் அலகிட்டு மெழுகிட்டு அரனுக்குப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடும் சரியையும், புறத்தே பூசித்தவாறு அகத்தேயும் நினைந்து வழிபடும் கிரியையும் மேல் வினை எனப்படும். வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தனது பிள்ளையையே உணவாக்கிய சிறுதொண்டர் செய்கையும், சிவபெருமானுக்கெனக் கொண்டுசென்ற நிவேதனப்பொருள்

கமரிடைச் சிந்த உறுபிறப்பு அரிவார்போல ஊட்டியை அறுத்த அரிவாள் தாயர் செய்கையும் வல்வினையாகும். வல்வினையாவது செயற்கரியதாகிய வினையாகும்.

சிவயோகம் :- இது ஆதாரயோகம் என்றும் நிராதாரயோகம் என்றும் இருவகைப்படும். மூலாதாரம், சுவாதிட்டானம் மணி பூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங் களிலும் குருவால் அருளிச் செய்யப்பட்டதொரு திரிமேனியை அதற்குப் பொருந்தினதொரு ஆதாரத்திலே வைத்து வழிபடல் ஆதாரமேயாகும். இவ்வாதார யோகம் தூல, சூக்கும பரம் எனப்பட்டு முப்பிரிவாகக் கூறப்படும். ஒன்றினொன்றுயர்ந்து நிற்கும். தற்போதத்தால் காணப்படாததும், எல்லாப் பொருள் களிலும் தோய்ந்தும் தோயாது நிற்பதும் ஆகிய பரம் பொருளையே தியானித்து அங்ஙனம் தியானிக்கின்றோம் என்னும் தன்னினைவும் அற்று அப்பெருமானோடு ஒன்றிநிற்றல் நிராதார யோகம் ஆகும். இதனையும் தூல, சூக்கும, பரம் என மூன்றாக விவரித்துக் கூறுவர். இது யோகநெறியில் நின்ற திருக்கடவூர் ஆளுடைய தேவ நாயனார் அறிதல், திருமூலர் தாமறிதல் அன்றி அடியேன் அறியும் நெறியன்று.

சிவஞானம் :- மேற்கூறிய சிவதன்ம, சிவயோகப் பயனால் விளைவது சிவஞானம் ஆகும். இதனைப் பெற்றே வீட்டினை எய்தவேண்டும். ''மேல் சரியை கிரியா யோகங்கள் செய்துழி, நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லாது மோக்ஷத்தைக் கோடாவாகலான்'' என்றும் சிவஞான போதச் சிற்றுரை இவ் வுண்மையை விளக்கும். கேட்டல் சிந்தித்தல் தெளிதல், நிட்டையென இது நான்குவகைப்படும். கேட்டல் சிந்தித்தல் ஆகிய இரண்டும் கலைஞானம் என்றும், தெளிதல் நிட்டை ஆகிய இரண்டும் மெய்ஞ்ஞானம் என்றும் கூறப்படும். இவ் வாற்றான் இரண்டுவகைப்படும். இவ்விருவகை ஞானமுமே கழுமலத்தில் காழிப்பிள்ளையாருக்குக் கிடைத்ததாகும். இத் தகையஞானத்தைப்பெற நில்லாதவற்றை நிலையினஎன்றுணரும் புல்லறிவாண்மை நீங்கவேண்டும். இவ்வாராய்ச்சியில் தலைப் படுதலே தத்துவவிசாரணை ஆகும். உயிர் அளவின்றி ஈட்டிய வினைப்பயத்தால் இவ்வுடலை எடுக்கின்றது. உடலுடன் உயிர் இயங்கும். இயக்க நிலையில் தொழிற்பட வேண்டிய தத்துவங் கள் முப்பத்தாறு என்பர். அவற்றின் இயல்பினையும், உயிரின்

இயல்பினையும், உயிர்கருவி காரணங்களினின்றும் நீங்கிச் சிவ போகப் பெருவாழ்வில் தலைப்படக் காரணமாகும். சிவபெரு மானின் பெருமையினையும், உள்ளவாறறிந்து பாவமலனையற மாற்றும் பாங்கினைப் பெறுவதே ஞானநெறியாகும். இத் தகைய ஞான நெறியில் நிற்போர் தமது சித்தத்தைச் சிவன் பாலே வைத்து வாழ்வதால் அவர்கள் செய்தனவெல்லாம் தவமாகும். கூற்றம் குதித்தலும் கைகூடும். இவர்கள் நிறை மொழி மாந்தர் ஆகலான் ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்க லும் எண்ணில் எளிதில் முடியுமாம் தென்புகலி வேந்தராம் திருஞானசம்பந்தரும், திருவாமூராளியாம் திருநாவுக்கரசரும், தோகையர்பால் தூதாகப்போகவிடும் வன்றொண்டராம் சுந்தர ரும், திருவாதவூராளும்தேனும் மணிவாசகரும் மேற்காட்டிய சிவஞானச் செல்வர்கள் ஆவார்கள். கண்ணப்பர் அன்பும் சேந்தனார் அன்பும் மங்கையர்க்கரசியாரன்பும் அளவிடற்கரியது. அன்பே என் அன்பே என்று அன்பால் அழுதரற்றி அன்பே அன்பாகத் திளைத்து நிற்பவர்கள் இவர்கள்.

ஞானகுரு: இறைவனே குருவாக வருகின்றார். அப் பெருமானே என்னுடைய ஆளுடைய தேவநாயனார் ஆவர். அவர் காலத்தால் தாளைத்தந்து, என் பிறவித்தாளை அறவெறிந் தார். அவர் என்னை ஆளாகக் கொண்டமையால் என்னை யறிந்தேன். தன்னைத் தாம் அறிந்த அன்பர்களின் கூட்டத்தை யும் பெற்றேன். இங்ஙனம் ஆட்கொண்டருளிய குருநாதருக்கு என்ன செய்ய வல்லேன்! ஏது சொல்லி வாழ்த்துவன்! சொல்லுவதறியேன் வாழி! எனக்கூறி முடித்திருப்பது குரு வருளின் மேன்மையையும், அவர்பால் இவருக்குள்ள அன்பை யும் புலப்படுத்துவதாகும். (தொடரும்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், சே. செல்வப்ப முதலியார்

கூறற்கரியது கூற்றைவென்றான் செயல் கூற்றுவற்குங்
கோறற் கரியது நீறிட்டவருயிர் கொற்றவர்க்கும்
வேறற் கரியது முன்னைவினைப்பயன் விண்ணவர்க்குந்
தேறற் கரியது காரிகையார்மனஞ் சேயிழையே. 86

திருவிசைப்பா

தருமையாதீனப்புலவர்
வித்துவான். வை. குஞ்சிதபாதம் பிள்ளை

(மலர் 20, இதழ் 8, பக்கம் 450 இன் தொடர்ச்சி)

உருகாத கன்மனத்தையும் தன் கருணையினால் உருக வைக்குஞ் சிவபெருமான் பவனிவருகின்றான். அக்கோலத்தைக் கண்ட ஒரு பெண் அப்பெருமான்மீது காதல்கொண்டு சிரமேற் கைகூப்பித் தொழுது கண்ணீர் சொரிகின்றாள்; ஆண்டவன் ஆட்கொள்ளவில்லை; அப்பெண் ஆற்றாமையால் அருள் செய்ய மாட்டாயா என்று வருந்துகின்றாள். இக் கருத்தினை,

"நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே"

என்னும் பாடலில் கண்டு இன்புறலாம்.

மேலும் அப்பெண் "பெருமானே ! நீ வாராதொழிந்தாலும் ஏழையாகிய யான் உன் திருவடிகளில் வீழ்ந்து குவளைமலர் போன்ற கண்களிலிருந்து கோக்கப்பெறாத முத்துக்கள்போல் கண்ணீர்த் துளிகளைச் சிந்துகின்றேன்; என்பால் ஆவாவென் றிரக்கங்கொண்டு அருள்புரியமாட்டாயா? தேவர்கணந் தொழுதேத்துந் தேவனே ! தென்பாலுள்ள பொழில் சூழ்ந்த கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' என வேண்டுகிறாள். இக் கருத்தமைந்த செய்யுளைக் கீழே காண்க:-

"நீவாரா தொழிந்தாலும் நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தம் குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாவென் றருள்புரியாய் அமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே"

இச் செய்யுளில் கண்ணீர்த் துளிகளைக் கோவாத மணி முத்தம் என்றும், மைதீட்டிய கண்களைக் குவளைமலரேன்றும் கூறிய கற்பனை நயம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

சேந்தனுர் போன்ற அனுபவஞானிகள் இங்ஙனம் இறைவனை நாயகனுகவும் தம்மை நாயகியாகவுங் கோண்டு பாடினுரேனக் கோள்க.

அறியாதார் சிலர் சிவபெருமானைத் துடைக்குந் தெய்வமேன்றும் அவனை வழிபட்டால் போன்னும் போருளும் போகமும் பேற இயலாதேன்றுங் கூறிப் பிற தெய்வங்களை வழிபட ஈர்த்து மருட்டுவர். அன்னுர் மருளுரை கோள்ளார் அறிவுடையார். சிவன் என்ற சோல்லுக்கே மங்களத்தைச் செய்பவன் என்பது போருள். அவன் அருளுபவன் என்பதற்குச் சேந்தனுர் திருவிசைப்பாவிலிருந்து ஒரு எடுத்துக்காட்டுக் காட்டுவாம்:-

'' அற்புதத் தேய்வம் இதனின்மற் றுண்டே
அன்போடு தன்னையஞ் சேழுத்தின்
சோற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறும்
தோண்டருக் கேண்திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்போன் மாளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் போழிலும் முழுதுமாம் கங்கை
கோண்ட சோளேச்சரத் தானே.''

என்னும் இச்செய்யுளில் '' சிவனை விடச் சிறந்த தெய்வமில்லை; அவனது ஐந்தேழுத்தை உள்ளத்துவைத்தோதிக் களிக்கும் அன்பருக்கு எட்டுத் திசைகளிலிருந்தும் போன்னும், பற்பல போருட்குவியல்களும், பைம்போன்னுலாகிய மாளிகையும், பவளம்போன்ற சிவந்த வாயினையும் பருத்த தனங்களையுமுடைய பேண்களையணையும் போகமும், கற்பகத்தருவும் மற்றும் எல்லாம் அளிப்பான் கங்கைகோண்ட சோளேச்சரத்தான் '' என்று விளக்கியுள்ளார் ஆசிரியர்.

'' போன்னு மேய்ப்போருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானை ''

எனச் சுந்தரரும்,

"களித்துக் கலந்ததோர் காதற் கசிவோடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்ற இப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்கும்ஐ யாறன் அடித்தலமே"

என்று அப்பரும்,

'புவம் வளி' என்று துவங்கும் திருச்சிவபுரப் பதிகத்துள் பாத்தோறும் சிவனை வழிபடுவார் இன்னின்ன செல்வங்களை எய்துவார்களென்று ஞானசம்பந்தப் பெருமானும் கூறியிருப்பன மேலைத் திருவிசைப்பாவுடன் ஒப்புநோக்கத் தக்கவையாம். 'வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ' என்றார் மணிவாசகரும். இப்பெரியோர் பொன்மொழிகளை உற்று நோக்குமிடத்துச் சிவபெருமானே எல்லாச் செல்வங்களுந் தர வல்லவன் என்பது தேற்றமாம்.

கருவூர்த்தேவர் மற்றோர் பாடலில் பெண்ணாசை கொண்டவரும் அவர்கள்மேல் வைக்கும் அன்பில் நூறுயிரத்தில் ஒரு கூறு ஆண்டவனிடம் வைத்தால் தேவலோகபதவி கிடைத்து விடுமென்றும் ஒருகால் பித்தனென்று பேசினாலும் அதைப் பொறுத்து அருள் செய்வானென்றும், அவன் என் சிரமேல் கைவைத்து அருள் செய்தவனென்றுங் கூறியுள்ளார். இதனால் யார் இறைவனிடம் சிறிது அன்புவைத்தாலும் அவர்கட்கு அவன் பேரருள் புரிவா னென்பதும், தம்மை வைதாரையும் வாழவைப்பவன் என்பதும் தெளிவாகும்.

இக் கருத்தமைந்த பாடலைக் கீழே காண்க:-

"தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவை நூறுயிரங் கூறிட்டு.
அத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை,
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோளேச்சரத் தானே"

இச் சிறிய கட்டுரையில் ஒன்பதாந் திருமுறையிலுள்ள முந்நூற்றுமுன்னு பாடல்களின் அருங் கருத்துக்களையெல்லாம் முற்றும் எடுத்து மொழிய முடியாதாகலின், அங்குமிங்குமாக என் சிற்றறிவுக்கெட்டிய சில பாடல்களைப்பற்றியே கூறினேன்.

இதுகாறுங் கூறியவற்ருல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருவிசைப்பா ஒன்பதாந் திருமுறையாக விளங்குகின்றதென்பதும், அதனைப் பாடியவர் ஒன்பதின்மர் என்பதும், அவர்கள் பாடிய பாடல்களெல்லாம் இறைவன் புகழைக்கூறும் இசைப்பாடல்களென்பதும், அப்பாடல்கள் இறைவன் இயல்பினையும், அவனை ஆன்மாக்கள் அடைந்து உய்யும் நெறியினையும் உணர்த்துந் தன்மையன என்பதும், 'பாடியவே பாடி ஏத்துகப்பானை' என்றபடி இத் திருவிசைப்பாக்களை உள்ளம் உருகி ஓதுவார் ஆண்டவன் திருவருளைப் பெறலாம் என்பதும் ஒருவாறு விளங்கும்.

மதிப்புரை :

பிரதிபேத ஆராய்ச்சி

[Research in Textual Variations]

ஆசிரியர் : மூ. இராமகிருட்டினன்; ஆசிரியர் ; வ. வே, உயர்நிலைப்பள்ளி, வேங்கடாசலபுரம். (வழி) தேனீ. பக்கங்கள் 91; விலை ரூ. 1—75·]

பாடவேறுபாடுகள் பெரிதும் காணப்பெறும் புறநானூற்றின் பிரதிபேதங்களைப் பற்றிய ஆராய்ச்சி இந்நூல். டாக்டர். திரு, உ. வே. சா. அவர்கள் பதிப்பை முதலாகக் கொண்டது இந்நூல். கேரளப்பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர், திரு. வி. ஐ· சுப்பிரமணியம் M. A. அவர்கள் எழுதிய அணிந்துரை முதற்கண் விளங்குகின்றது. மேல்நாட்டில் சிறப்பிடம் பெற்றுத் திகழும் பதிப்புக்கலை (Textual Criticism) யின் மாண்புமிகு நிலையைத் தமிழுலகு நன்கு தெரிய இத்தகு நூல்கள் நற்றுணை புரியும் எனற்கு ஐயம் இன்று. பாட வேறுபாடுகள் இனித் தோன்ருவண்ணம் சில வழிகளைச் சொல்லுதலின் மொழித்துறைக்கு இதனல் விளையும்பயன் பெரிது எனல் சொல்லாமலே அமையும்· பேராசிரியர் கூறுவது போல், "நல்லவை எல்லாந் தமிழில் உண்டு என்னும் நற்சொல்லைத்தோற்றுவிக்கும்" இந்நூலாசிரியரின் இம் முயற்சியை அறிவுலகு வரவேற்கும். தமிழ் உலகிற்கு நல்ல படைப்பு.

—சொ. சிங்காரவேலன், B. A.

இலக்கியமும் ஆராய்ச்சியும்

வித்துவான். வி. மு. சுப்பிரமணிய அய்யர் M. A.,

(மலர் 20, இதழ் 8, பக்கம் 482 இன் தொடர்ச்சி)

திருஞானசம்பந்தப்பெருமான்தேவாரத்தில் முதல்திருமுறையில் திருவதிகைவீரட்டானப் பதிகத்தின் 10 ஆம் திருப்பாட்டு ஜைன பௌத்தரைக் கூறுவது. அதன் முதலடி ' அரையோடு அலர்பிண்டி மருவிக் குண்டிகை '' என்பது. இதனுள் அரை என்பதற்கு வேற்றரை என்று சிலர் அடிக்குறிப்பில் பொருள் எழுதியுள்ளனர். அது பொருந்துமா என்பது ஆராய்தற்குரியது. இரண்டாம் அடியில் ' உடைவிட்டுழல்வார்கள் ' என வந்துள்ளது. ஆதலால் முதலடியில் அரையென்பது வேற்றரையென்று பொருள்தருதற்கு இடமில்லை. பின்னை அதன் பொருள் யாது ? பிண்டி அசோகு என்பதும் அது அருகனுக்கு உரியதென்பதும் தமிழறிஞர் யாரும் அறிந்ததோன்றே. அரை என்பது பௌத்தருக்குரிய அரசமரத்தைக் குறிப்பதாகவேண்டும். தோல்காப்பியத்துள் உயிர்மயங்கியலுள், ' பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும் ' என்பதனுள் கூறப்பட்ட அரை என்பதன் பொருளும் இதனால் துணிய ஏதுவாக உள்ளது. அதேதிருமுறையில் திருமுதுகுன்றத் தேவாரத்தின் இரண்டாம் திருப்பாட்டின் முதல் அடியில் ' தழையார் வடவியவீதனில் ' எனக் காணப்படுகின்றது. வியவீ என்பதற்குப் பொருள் விளங்கவில்லை. இவ்வடி தக்ஷிணாமூர்த்தி அவசரத்தைக் குறிக்கின்றது. அங்ஙனமாயின் வியவீ என்பது விடவி என்பதாக வேண்டும். விடவீ என்பது விடவி என்பதன் நீட்டல் விகாரம். சந்தத்திற்கு ஏற்பவந்தது. விடபம் - கிளை. அதனை உடையது விடபி ; அது தமிழில் வீடவி என வந்தது. அப்போழுது வடவிடவீயேன்பது ஆலமரத்தைக் குறிப்பதாகும்.

திருநாவுக்கரசர் திருமுறையிலும் சாய்க்காட்டுத் தலத்தைச் சேர்ந்த தேவாரத்தில் ஈற்றுத் திருப்பாட்டில் '' புயங்களைஞ்

ஞான்கும் பத்தும் மாயகோண் டரக்கனேடிச் சிவன்திரு மலையைப் பேர்க்க'' என்றுள்ளது. இது இராவணன் செயலைக் கூறும் பாசுரம். புயங்கள் என்று பாடமாயின் இராவணனுக்குப் பத்துத் தலைகள் இருந்தனவாகக் கேள்விப்படுகின்றேமேயன்றி முப்பது இருந்ததாகக் கேள்விப்படவில்லை. இதனுடைய முதலடியைப் பிழைபட ஓதிவந்தமையே இந்த மயக்கத்துக்குக் காரணம் ஆயிற்று. புயங்கம் ஐஞ்ஞான்கும் பத்தும் என்பதே பிழைநீக்கிய பாடம்; அப்போது நிரனிறையாகப் புயம் இருபதும், தலை பத்தும் என்று எளிதில் பொருள்பட்டு மயக்கமும் நீங்குகின்றது.

4 ஆம் திருமுறையைச் சேர்ந்த திருவாரூர்த் திருநேரிசை 10 ஆம் திருப்பாட்டின் முதலடி 'ஆயிரங் திங்கள் மோய்த்த அலைகடலமுதம் வாங்கி' என்று அச்சிட்ட பிரதிகளில் எல்லாம் காணப்படுகின்றது. கடலில் நதிகள் மோய்ப்பதாகக் கூறப் படுதல் மரபேயன்றித் திங்கள், அதுவும் ஆயிரம் திங்கள் மோய்ப்பதாகக் கூறப்படுதல் இல்லை. இங்கும் 'ஆயிரங்திங்கள்' என்ற இடத்து ஙகர ஒற்ருகப் படித்தமையால் ஒரே எழுத்துத் தேவையாயிற்று. ஙகர ஒற்றைச் சேர்க்கவேண்டிவந்தது. இதனைப் பிழைநீக்கி வாசித்தால் 'ஆயிர நதிகள் மோய்த்த' என்ருகும்.

சுந்தரர் தேவாரத்தில் புறம்பயத் தேவாரத்தில் 7 ஆம் திருப்பாட்டில் ஈற்றடி, 'புன்னைக் கன்கழிக்கரும்பு புறம்பயம் தோழப் போதுமே' என்று உள்ளது; புறம்பயம் நெய்தல் நிலத்திலுள்ளது அன்று; மருதநிலத்திலுள்ளது; அதற்கு, 'புன்னைக் கன்னிகைக் கரும்பு புறம்பயம் தோழப் போதுமே' என்று பாடபேதமும் உள்ளது; இதுவே சிறந்ததும் உண்மையான பாடமும் ஆதல்வேண்டும்; பிற திருமுறைகளிலும் புன்னையரும்புக்கு அக்கை உவமையாகக் கூறிய இடங்கள் உள்ளன; திருஞான சம்பந்தர் தேவாரத்தில், 'புன்னைய மலர்ப்போழில்க ளக்கினேளி காட்ட' எனவும், பதினேராம் திருமுறையில் கபிலதேவநாயனுர் இயற்றிய சிவபெருமான் திருவிரட்டைமணிமாலையின் 30 ஆம் செய்யுளில் 'புன்னைமுன்னம் அக்கு வரும் கழிக்கானல் ஐயாறரை' எனவும் வரும் பகுதிகள் காண்க.

சங்கநூல்களில் ஒரு தலைவியைச் சிறப்பிக்கும்போது, இன்ன தலைவனுடைய இன்னாநகர் போன்ற சிறப்புடையவள்

என்று கூறுவது மரபு. இதனை, 'தேர்வண் கோமான் தேனூர் அன்ன இவள்', 'வேல்போர்ச் சோழர் ஆமூர் அன்ன இவள்' (ஐங்குறுநூறு. 55, 56) என்ற அடிகளால் உணரலாம். இந்த ஆன்றோர் மரபை உணராமல் படிப்பவர்க்குப் பொருள் விளங்க வேண்டுமே என்ற எண்ணத்தோடு தவறுகப் பதம் பிரித்துப் பதிப்பித்த பதிப்புக்களும் உள்ளன. பதினோராம் திருமுறையில் சேரமான்பெருமாள் நாயனுர் இயற்றிய திருவாரூர் மும்மணிக் கோவை உள்ளது. அந்நூலில் பல செய்யுட்கள் அகப் பொருட்டுறை அமைந்துள்ளன. "துன்னரும் நஞ்சு, ஆரும் மிடற்றண்ணல் ஆரூர் அனைய அணங்கினுக்கே" என்பது 6 ஆம் பாட்டின் ஈற்றடி. அது 'ஆரும் மிடற்று அண்ணல் ஆரூரன் ஐய அணங்கினுக்கே' என்று பிரிக்கப்பட்டுப் பொருள் மயக்கத்திற்கு இடம் ஆகின்றது.

அதே திருமுறையில், சிவபெருமான் திருவிரட்டை மணி மாலையில் 28 ஆம் திருப்பாட்டின் முதலடி 'கோடிறு முரித் தனன் கூருளனல்லன் குருகினம் சென்று' என்று முதற்பதிப் பில் காணப்படுகின்றது. பின்பு பதித்தவர் பதம்பிரித்து மேலும் ஒரு பிழையைக் கூட்டினர்; 'கோடிறு முரித்தனன் கூருளன் நல்லன்' என்பது அது. இங்கே கூறிய கருத்து பின்வரும் பத்துப்பாட்டில் பெரும்பாணுற்றுப்படை யடிகளை ஊன்றி நோக்கி ஒப்பிட்டால் எளிதில் விளங்கும்; "மிதியுலைக் கொல்லன் முறிகோடிற்றன்ன கவைத்தாளலவன்" என்பன அவ்வடிகள் (207 - 8). இதைக்கொண்டு செப்பஞ் செய்யின், இவ்வடி 'கோடிறு முரித்தன்ன கூன்ருளலவன்' என்றிருக்க வேண்டும். யான் முன்னே கூறியபடி ஒற்றுக்களுக்குப் புள்ளி யிடப்படாமையும், லகர வகர வேறுபாடின்மையும் இப்பிழை பட்ட பாடத்துக்குக் காரணமாயின.

பொருள் வரையறை செய்துகொள்ளாமல் தவறுகப்பிரித்துப் பொருள்மயக்கம் உண்டாக்கியதற்கு இரண்டோர்உதாரணங்கள் காட்டி இக்கட்டுரையை முடிப்பன்.

சுந்தரர் தேவாரம், அரிசிற்கரைப்புத்தூர்த் தேவாரம் 7 ஆம் பாட்டு தக்கன் யாகம் அழித்த செய்தி கூறுவது. தேவர் பலருடைய அங்கங்களைச் சிதைத்ததைக் கூறுவது. 'பழிக்கும்

பெருந்தக்கன் எச்சம் அழியப் பகலோன் முதலாப் பலதேவரை யும், தெழித்திட்டு அவர்அங்கம் சிதைத்தருளும் செய்கை என்னைகொல்லோ ' என்று இருக்கவேண்டியது, ' தெழித்திட்ட அரங்கம் ' என்று பிரிக்கப்பட்டுள்ளது.

திருக்கச்சிமேற்றளிப் பதிகம் 8 ஆம் திருப்பாட்டிலும், திருக்காளத்திப்பதிகம் 8 ஆம் பாடலிலும் ' கூறேன் நாவதனுல் ' என்று பிரிக்கப்படவேண்டியது ' கூறேன் ஆவதனுல் ' என்று பிரிக்கப்பட்டுள்ளது. இன்னும் பதினோராம் திருமுறையில் சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை 8 ஆம் திருப்பாட்டில் ' திரியும் புரம்முன் றறப்பாய் எரியுற வான்வரை வில்வளைத்தாய் இரவாய், மறப்பாவரியர நாணிடைக் கோத்தகை வானவனே ' என்று காணப்படுகின்றது. ' வில்வளைத்து ஆயிரவாய் மறப்பா வலியர ' என்றிருக்கவேண்டும். ஆதிசேடனுக்கு ஆயிரம் தலை என்பது பிரசித்தமான செய்தி.

இதுகாறும் கூறியவற்ருல் ஆராய்ச்சி மொழியில் ஆழ்ந்த பயிற்சியும், முன்னோர் மரபும், ஏட்டுச்சுவடிகளைப் படிக்கும் சிறந்த பழக்கமும் உடையவர்கள் மேற்கொள்ளத் தக்கது என்பதும், அதற்கு முடிவில்லை என்பதும் நூல்களை அச்சிடுதல் அவசரமின்றி நிதானமாகச் செய்யத்தக்க பணி என்பதும் உணரலாகும். பிழை மலிய அச்சிட்டால் பிற்காலத் தில் பிழைகளைத் திருத்துதற்குக் கருவிகளான ஏட்டுச்சுவடி களும் அழிந்துபோகக்கூடும். இதனுல் பதிப்பாசிரியர்களைக் குறைசொன்னதாகக் கருதாமல் தாம் மேற்கொள்ளும் பணி மேன்மையும் பெரும்பொறுப்பும் வாய்ந்தது என்பதை உணர்ந்து ஆற்றவேண்டுமென்பதே என் வேண்டுகோளாகும்.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

வறந்தா ரனையர் வயிற்றுக்குணுதவர் வையகத்திற்
றுறந்தா ரனையர் சுடுஞ்சோற் பொறுப்பவர் தொல்லுறவை
மறந்தா ரனையர் மணத்தும்வராதவர் வாழ்ந்துமுயிர்
இறந்தா ரனையர் அன்பில்லாத மாந்த ரிளங்குயிலே. 87

ஞானப்பிரகாசமாலை

வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன்

(மலர் 20, இதழ் 8, பக்கம் 492 இன் தொடர்ச்சி)

இறைவனே குரு என்றும், குருவே சிவம் என்றும் எண்ணி வழிபாடு செய்த குருஞானசம்பந்தரின் அன்பு நிலையை அறிய ஞானப்பிரகாசமாலை மிக்க துணையாக இருக்கின்றது.

சொற்படி நிற்க முத்திநிச்சயம்

ஞானப்பிரகாசரைக் குருவே சிவமாகக் கண்ட குருஞான சம்பந்தர் குருவாணை கடவாது விளங்கினார் என்பதையும் இந் நூலால் அறியலாம். அவர் சொற்படி நின்றால் பெறும் பேற்றை யும் கூறிச சென்றுள்ளார் குருஞானசம்பந்தர். காணப்படும் இப்பிரபஞ்ச வாழ்வெல்லாம் பொய்யென்பதை உணர்ந்தேன். இன்பவாரியுள்ளே சென்றேன். அதைத் தேக்கினேன். அதிலே நிலைத்து நிற்கின்றேன் என்கிறார். அத்திருப்பாடல் வருமாறு :

" வல்லான் கமலையுள் ஞானப்பிரகாசன் வசனமுணர்ந்து
எல்லாம் வெறுமித்தையென்று கண்டேன் இன்பவாரியுள்ளே
சொல்லாமற் சென்றதைத்தேக்காமற் றேக்கித் தினந்தினமும்
நில்லாமனின்று கொண்டேன் இதுவே முத்திநிச்சயமே "

மற்றோரிடத்தில் போதிசுமக்கும் எருதுக்குத் தன்னிச்சை கிடையாது. எருது தன்னை உடையானது குறிப்பின்வண்ணம் போதி சுமக்கவே வேண்டும். அவன் விருப்பப்படியே எங்கும் செல்லுதல்வேண்டும். அதேபோல் எனக்கும் உடற்கும் என் விருப்பம்போல் நடத்தல் இல்லை. உன் சொற்படி நிற்பவன் யான்; உன் விருப்பப்படியே செயற்படுபவன். ஆதலால் உன் விருப்பத்தை எனக்கு உரைத்தருள். அவ்வாணை கடவாது இருக்கின்றேன் என்கிறார்.

" கனக்கும் போதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ இணங்கார் புரத்தைச்
சினக்குங் கமலையின் ஞானப்ர காச சிதம்பர இன்(று)
உனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே.

இப்பாடலைத் தனிப்பாடல் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இஃது இப்பாமாலையில் இடம் பெற்றுள்ளது.

ஞானப்பிரகாசன் அடியவர்கள்

உலகத்தில் அடியவர்கள் மிக உயர்ந்தவர்கள்; அவர்களது பெருமையைச் சுந்தரருக்கு இறைவனே எடுத்துக் கூறுகிறார். திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்துள்ள அடியவர்களுக்கு அடியேனாகப்பண்ணும் நாள் எந்நாள் என்று பரமர் தாளைப் பரவுகின்றார் சுந்தரர். அவர் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவன் "அடியவர்கள் வேறு தாம் வேறு என்பதில்லை. இருமையும் கடந்து நின்றவர்கள் அடியவர்கள். அவர்கள் எம்மைப்பேணி வழிபட்டுப் பெற்றார்கள். ஒருமையால் உலகை வெல்லும் ஆற்றலுடையவர்கள். அன்பினால் இன்பம் ஆர்ப வர்கள் இவரை நீ அடைவாய்" என்று அருளினார்.

"பெருமையால் தம்மைஒப்பார் பேணலால் எம்மைப்பெற்றார்
ஒருமையால் உலகைவெல்வார் ஊனமேல் ஒன்றும்இல்லார்
அருமையாம் நிலையில்நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்துநின்றார் இவரைநீ அடைவாய்என்று"

ஔவையாரும் "தொண்டர் தம்பெருமை சொல்லவும் அரிதே" என்று குறிப்பிடுகிறார். குருஞானசம்பந்தர் ஞானப் பிரகாசரின் அடியவர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகின்றார். அவர் அடியவர்கள் பொல்லாத தீவினையிற் போக மாட்டார்கள். போனாலும் எல்லாம் சிவன்செயல் என்று இருப் பார்கள் என்கிறார்.

'பொல்லாத தீவினையிற் போகார்கள் போனாலும்
எல்லாஞ் சிவன்செயலே என்றிருப்பார்—நல்லார்கள்
நற்றுங் கமலையில்வாழ் ஞானப்ர காசனருள்
சற்றும் பிரியா தவர்" (சிவபோ. 102)

மற்றோரிடத்தில் ஞானப்பிரகாசன் மெய்த்தொண்டர்களின் செயல்கள் எவை என்பதை வரையறுத்துக் கூறுகிறார். பதி யார்? பசு என்பது எது? பாசத்தின் தன்மை என்ன? என்று பதி பசு, பாசத்தின் உண்மையை ஆராய்வார்கள். அவற்றை ஆராய்ந்தவர்கள் பிரபஞ்சத்தின் வாழ்க்கையைக் காய்வார்கள். கல்வி கேள்வி ஆகிய அல்லல்களினின்றும் ஓய்வார்கள். சிவானந்த வாரியுள்ளே தோய்வார்கள் என்று ஒரு பாடலில் ஞானப்பிரகாசர் தொண்டர்களின் செயல்களைக் கூறுகின்றார்.

“ ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாங் கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயோன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.”

மேலும், ஞானப்பிரகாசன் அடியவர்கள் என்ருல் எமனும் அருகில் வரமாட்டான். பிரமன்கூட மீண்டும் கருக்குழியில் தள்ளமாட்டான். பரானந்தம் மேவிடும். சுகத்தில் வாழலாம் என்று ஞானப்பிரகாசமாலையில் குறிப்பிடுகின்ருர். மற்ருேரிடத்தில் தவம் செய்யும் முனிவர்களை விளித்துக் கூறுகின்ருர். மலையுச்சியில் நின்று கடுங்கனவில் தவஞ்செய்வோரே ! நீங்கள் கடுந்துன்பமடைந்து தவஞ்செய்யவேண்டாம். பிறவியாகிய தளையைக் களையவே நீங்கள் தவஞ்செய்கின்றீர்கள். தவஞ் செய்தலாகிய துன்பமுருமல் பிறவித்தளையைப் போக்கலாம். அதற்குரிய வழியைக் கூறுகின்றேன் கேளுங்கள். ஞானப்பிர காசன் அடியவர்கள் என்ற பெயரைமட்டும் நீங்கள் அடைந்தால் உங்கள் பிறவித்தளை அற்றுவிடும். தவஞ்செய்யவேண்டாம் என்று கூறுகிருர்.

“ காரே சுமந்தகிரிமீது நின்று கடுங்கனலில்
நேரே யருந்தவஞ்செய்வீர் கமலையன் நெஞ்சில்அன்பர்
ஆரேனும் ஆள்பவன் ஞானப்பிரகாசன் அடியரேனும்
பேரே படைமின் அதுபோதும் பிறப்பறவே.”

திருவடிப் பெருமை

சைவசித்தாந்தத்தின் முடிந்தநிலை உயிர்கள் இறைவன் திருவடியில் இரண்டறக்கலத்தல். ஈசன் திருவடி சிந்தித்தற் கரியன. செந்தேன் முந்திப்பொழிவன முத்திகொடுப்பன என்றும், அவன் திருவடி மாசில்லாவீணை போன்றது. மாலை மதியம் போன்றது, குளிர்ந்த பொய்கை போன்றது என்றும் கூறுவதை அப்பர் சுவாமிகள் திருவாக்கில் காணலாம். இந்தத் திருவடியின்பத்தில் தோய்ந்த அடியவர்கள் பலர். இறைவனின் திருவடிப்பெருமையை உணர்ந்த காரைக்காலம்மையார் “நான் பாடவேண்டும் ; நீ ஆடவேண்டும் ; உன் திருவடி என் தலை மீது தோயவேண்டும்” என்று வேண்டுகிருர்.

மனித்தப்பிறவி உலகில் மிகத் துன்பமானது. இப்பிறப் பைப் பலரும் வெறுக்கின்ருர்கள். ஆனுல் திருநாவுக்கரசு சுவாமிகள் மனித்தப்பிறவி வேண்டும் என்கின்ருர். ஏன் ?

எப்பொழுது என்பதற்கு விடையருளுவார் போல "இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டுவதே" என்கிருர். இதுமட்டுமா? "கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளம்" "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்" என்றும் கூறுகிருர். குருஞானசம்பந்த சுவாமிகள் "ஞானப்பிரகாச நின் பொன் மலர்த்தாள் பேயேன் மறப்பது உண்டோ இனி மேலும் பிறக்கினுமே" என்று கூறுகின்ருர் மேலும் மக்களுக்குத் துணை மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர் அறிந்தோர். எனக்குத் தாயும், தந்தையும், சுற்றமும், இன்பமும், உலகமும் எல்லாம் உன் திருவடியே என்கிருர்.

"மாதாபிதா குருதெய்வம் துணை யென்பர்
மக்கட்கு உன்றன் பாதாரவிந்தம் அடியேற்கு"

"தந்தையுந் தாயுந் தமர்களும் போகமுந் தாரணியும்
எந்தையும் எந்தம் உயிர்க் குயிரானும் இரவினுக்கே
சந்தையும் பெற்ற கமலாலயனுந் தனுவும் என்றன்
சிந்தையும் ஞானப்பிரகாச தேசிகன் திருவடியே."

மேலும், விண்ணிலே செல்லும் கருமேகத்தைக் கண்ட மயில் களிப்புற்ருடுகின்றது. அதுபோன்று உன் திருவடியைக்கண்டு களிப்புறும் நாள் எந்நாள் என்று வினவுகின்ருர் குருஞான சம்பந்தர். திருநாவுக்கரசர் திருவடி சூட்ட வேண்டுமென்று இறைவனிடம் வேண்டியதைப்போல தமது குருமணியிடம்,

"ஞானப்பிர காசவுன்றன் மலர்ப்பதத்தை நாயேன்
சிரத்தணிவித்து ஆள்கமலையுள் நாயகமே"

என்று வேண்டுகிருர்.

இதுகாறும் கூறியவற்ருல் ஞானப்பிரகாசமாலையில் சிறந்த சாத்திரக் கருத்துக்களும், மெய்யுணர்வு விளக்கங்களும், உபதேச விளக்கங்களும் நிறைந்துள்ளன என்பதும், குருநாதரை வந்தித்து வாழ்த்துதற்கு உருக்கமும் கருத்தின் பெருக்கமும் அமைந்த இத்திருவருட்பனுவல் துணைபுரியுமென்பதும் இனிது பெறப்படும். தருமையாதீன முதற்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தரின் அருள்வாக்காகிய இதனை நாடோறும் பாராயணம் செய்து நற்பயன் எய்துவோமாக.

கனகாபிஷேகம் கொண்டருளிய

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

இரண்டாவது

திருக்கேதார யாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

திருக்கேதாரம் இமயமலையில் உள்ள திருத்தலம். பாடல் பெற்ற அருள்தலம். அதனை முன்னும் ஒருமுறை தரிசித்து மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மீண்டும் தரிசிக்கத் திருவுள்ளம் பற்றினார்கள். தருமையில் ஸ்ரீ சொக்கநாதர் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி வழிபாடுகளை முடித்துக்கொண்டு அன்பர்கள் புடைசூழத் தருமையிலிருந்து எழுந்தருளினார்கள்; சென்னையை அடைந்து அன்பர்களின் அன்புவெள்ளத்தில் திளைத்தருளினார்கள்.

சென்னையில் ரயில் பிரயாணம் தொடங்கப்பெற்றது. காட்டுமன்னார்குடி திரு. M. R. பிள்ளை அவர்களும், மாயூரம் திரு. V. ராமநாதய்யரவர்களும், மாயூரம் டாக்டர் திரு. ராஜ கோபாலன் அவர்களும் குடும்ப சகிதமாக வந்தார்கள். சென்னையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியாகி யிருக்கும், செய்தி தெரிந்து திருவாளர்கள். S. A. ஐயாசாமி செட்டியார், இரத்தின முதலியார், K. வேங்கடசாமி நாயுடு, மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார், ஜட்ஜ் கனம். கைலாசம், திருமதி. சௌந்திரம் கைலாசம், சச்சிதானந்தம் பிள்ளை, சிவகுமாரன் முதலியோர் வந்து கண்டு வணங்கி, மாலை யிட்டு வழியனுப்பினார்கள். காட்டுமன்னார்குடி நாட்டுச் சின்னப் பண்ணையினர் சார்பில் திரு. ரத்தினம் முதலிய அலுவலர்கள், சீகாழி T. T. ஜெயராம பிள்ளை, சிதம்பரம் டாக்டர் திரு. K. ரெங்கசாமிப் பிள்ளை, சிதம்பரம், திரு. G. சபாபதிப் பிள்ளை, சென்னை ஸ்டேட்பாங்க் சூப்பரிண்டேன்டேண்ட், திரு. சுப்பிர மணியம் தம்பதியார், திரு. M. M. தண்டபாணி தேசிகர்,

தென்பிராந்திய ரயில்வேஸ்டேஷன்மாஸ்டர் திரு. G. ஸ்ரீநிவாசன், திரு. A. I. R. சோமசுந்தரம் முதலிய பலர் ரயிலடியில் மாலை யிட்டு வழியனுப்பினார்கள்.

கல்கத்தா வழியே காசிக்குப் புறப்பட்டோம். கல்கத்தா வந்ததும் திருமதி. லலிதா ராமச்சந்திரன், டாக்டர் ராஜகோபால னின் மைத்துனர் இருவர் ரயிலிலேயே வந்து கண்டு வரவேற்றார் கள். திருமதி. லலிதா வந்திருந்த அனைவருக்கும் விருந்து உப சாரம் செய்து மகிழ்ந்தார்கள். இவ்விதம் இறங்குவதில் ஒரு சிறிது காலதாமதமானதால் சந்திரகாசி என்னுமிடத்திற்கு வண்டி எடுத்துச் செல்லப்பட்டது. அது ஒரு சிறிய புறநகர். பின்பு கல்கத்தா வரும்போழுது மாலை 4 மணி ஆகிவிட்டது. வந்ததும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் திருமஞ்சன மாகிப் புறப்பட்டு இராமகிருஷ்ணர் பூசித்த காளி, கல்கத்தா காளி கட்டத்தில் உள்ள காளி முதலிய இடங்களில் வழிபாடு செய்தார்கள். பேலூர் இராமகிருஷ்ண மடம், ஜைனர்கோவில், முதலிய முக்கிய இடங்களை உடன் வந்தோர் சென்று கண்டு வந்தார்கள். அன்றிரவு 8-40க்கு ரயிலில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளினார்கள்.

மறுநாள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் உத்தரவுப்படியே ஸ்ரீ காசிக்கு முன்னுள்ள மோகல் சராய் ஸ்டேஷனில் காலைப் பலகாரம், காபி முதலியன குமார சுவாமி மடத்திலிருந்து அனுப்பப்பட்டு உபசரிக்கப்பட்டது.

ஸ்ரீ காசியில் குமாரசுவாமி மடத்து ஏஜண்டு கல்யாண சுந்தரம் பிள்ளை, காஷியர் சுப்பிரமணியம் முதலியோர் ரயிலடி யிலேயே மாலையிட்டு வரவேற்று வணங்கி அழைத்துச்சென்றார் கள். ஸ்ரீ குமாரசுவாமி மடத்துக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் எழுந்தருளியானதும் வழக்கம்போல் கொலுவிலமர்த்தி வழிபாடு கள் நிகழ்த்தப்பட்டன.

அன்று மாலையிலிருந்து கங்கா ஸ்நாநமும், கேதாரீஸ்வரர் வழிபாடும் நடந்துவந்தன. இரண்டு நாள் கழித்து அலகாபாத் துக்கு எழுந்தருளி அங்கு சுத்த கங்கை எடுத்துக்கொண்டு சுத்த கங்கையிலும், சங்கமத்திலும் திருமஞ்சனம் ஆயிற்று. உடன்வந்தோர் அலகாபாத் சர்வ கலாசாலை, சுயராஜ்யபவன்

ஆனந்தபவன், ஸ்ரீ பாரத்வாஜர் ஆலயம் முதலிய இடங்களுக்குச் சென்றுவந்தார்கள்.

மறுநாள் ஸ்ரீ காசிக்குத் திரும்ப வந்தபிறகு காசியில் உள்ள அகாடாக்களுக்குச்சொல்லி சாதுக்களுக்குப் பண்டாரா நடத்தப் பட்டது. கேதார கட்டம் ஸ்ரீ கேதாரேஸ்வாருக்கும், ஸ்ரீ காசி விஸ்வேசருக்கும் சிறப்பான பாலபிஷேகம் முதலியன செய்து வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஸ்ரீ காசி சர்வகலாசாலையில் உள்ள ஸ்ரீ விசுவேசர் ஆலயம், ஸ்ரீ சங்கட்ஹனுமார், துர்க்கை, அன்னபூரணு, தண்டபாணி, சங்கடதுர்க்கை முதலிய பல ஆலயங்களிலும் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. ஸ்ரீ அன்ன பூரணு ஆலயத்தில் வந்திருந்தவர்களில் தம்பதிகளாக உள்ள வர்கள் அன்னபூரணு மேருவிற்கு குங்குமார்ச்சனை செய்விக்கச் செய்தார்கள்.

உடன் வந்திருந்தோர், பாரத்மாதாமந்திர், கயா, புத்தகயா, சாரநாத் முதலிய பல இடங்களுக்கும் சென்றுகண்டு வந்தார்கள். ஸ்ரீ காசி ராஜாவையும் தரிசித்தார்கள். இவ்வாறு ஸ்ரீகாசி வழிபாடுகளை முடித்துக்கொண்டு ஹரித்துவார் வழியே ஸ்ரீ கேதாரத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளினுர்கள்.

ஸ்ரீ காசியீல் தங்கியிருந்த நாட்களில் ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் வழக்கம்போல மிகவும் நன்ருக உபசரித்து உணவிட்டு எல்லா நலன்களையும் செய்து உதவினர். தாயகத்தில் நடக்கும் எல்லா நலன்களுக்கும் உயர்ந்ததாகவே இருந்தது. அவரவரும் தம்தம் ஊர்விட்டு வந்து ஸ்ரீகாசியில் தொலைவில் இருந்ததாகவே தெரியாது மகிழ்ந்தார்கள். எல்லாம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள் திருவுளம் போலவே மிகச் சிறப்பாக இருந்தது. ஹரித்துவாரத்தில் கங்கையில் திருமஞ்சனமாகித் தங்கியிருந்து ரிஷிகேஷ் வழியாக கேதாரத்துக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எழுந் தருளியானுர்கள். ஹரித்துவாரத்தில் மதராஸி தர்மசாலையில் சென்னை M/s. பெருமாள் செட்டியார் கம்பெனி அதிபரின் உத்தரவுப்படி பல வசதிகள் கிடைத்தன. ரிஷிகேசத்தில் ஆந்திராஸ்ரமத்தில் தங்க வசதியாக இருந்தது.

கேதாரபண்டா ஸ்ரீ கங்காதரரை (ஸ்ரீ கணேசசங்கரவாஜ் பேயபண்டாவின் சகோதரர்) ஹரித்துவாரத்திலேயே வந்து சந்திக்கும்படி ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்து எஜண்ட் கல்யாணசுந்தரம் பிள்ளை ஏற்பாடு செய்திருந்தார். அவ்விதமே ஸ்ரீ கங்காதரர் வந்து உடனிருந்து உதவினுர். அவருக்குச் சிறிது தமிழும் தெரியும். ரிஷிகேசத்திலிருந்து ஸ்ரீநகர், அங்கிருந்து ருத்ரப்ரயாகை, பிறகு குண்டசட்டி வரையில், அதன்மேல் குப்தகாசி, கௌரிகுண்டம் (அநேகசந்தாவதம்) முதலிய இடங்களில் வழிபாடு செய்துகொண்டு ஸ்ரீ கேதாரத்துக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினுர்கள். கருடிய கட்டி கடந்து கேதாரத் திருக்கோவில் கண்ணிலே பட்டதும் அவரவர் உயிரையும் தொட்டது அக்காட்சி. வெகுநாட்களாக எதிர்நோக்கியிருந்த பெருந்தனம்கிட்டிய உணர்ச்சியில் (உணர்விழந்து) ஆனந்தக் கண்ணீர்வர எல்லோரும் கேதாரம் சென்றடைந்தோம். ஊர் எல்லையில் ஸ்ரீ கணேசசங்கரபண்டா அருளிப்பாடு கண்டு மாலையிட்டு வரவேற்று அழைத்துப்போனுர். அன்று (30-6-61) வெள்ளிக்கிழமை காலை 9-30க்குள் கேதாரம் சென்றடைந்தோம். அன்று உச்சிவேளையில் ஸ்ரீ கேதாரப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. மெய்யுருக்கும் காட்சியாக எல்லோரும் நெக்கு நெக்குருகி நின்று பெருமானைக் கண்டு வழிபட்டோம்.

அன்று மாலையில் கேதார முனிவராகிய ஸ்ரீ பல்லாரி பாபாவைக் கண்டு வழிபட்டு ஆசிபெற்றேம். இம்முனிவர் ஆண்டு முழுவதும் கேதாரத்திலேயே தங்கிப் பெருமானை வழிபடும் நியமம் உடைய பெரியோர். பனிக்காலம் வந்ததும் ஆறுமாதம் ஸ்ரீ கேதாரம் பனியால் மூடப்படும். பெருமானுக்கு ஊக்கி மடத்தில் வழிபாடுகள் நிகழ்த்தப்படும். வேனிற்காலம் வந்து பனி உருகியதும்தான் கேதாரத்தில் வழிபாடு உண்டு என்பதை எல்லோரும் அறிவர். அவ்வாறு மூடப்படும் காலம் தேவபூஜா காலம் என்றும் மற்றும் கோவில் திறந்ததும் நரர்பூஜை என்பதும் பலரும் அறிவார். இவ்வாறு வழிபாடு முடித்துக் கொண்டோம்.

பதரி வணங்குதுமே என்றுர் ஒரு பெரியார். அவ்வண்ணமே அங்குச் சென்று வழிபட்டுவருதல்வேண்டும் என்பது திருவுளம்.

ஆனுல் அதற்கு உத்தரவில்லே. கேதாரத்திலிருந்து திரும்பி வரும்வழியில் ருத்ரப்ரயாகையில் அன்று தங்கநேர்ந்தது. பதரிசெல்லும் வழி மழையினுல் சேதப்பட்டிருந்தது. ருத்ர ப்ரயாகைக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானத்தில் எழுந் தருளியிருந்தபொழுது அங்குள்ள உந்தூர்தி அதிகாரிகளே அணுகிக் கேட்டதற்கு 'இப்பொழுது உந்தூர்தி சமோலீ வரைதான் செல்லும். ஆனுல் இரண்டோரு நாட்களில் பீப்பல் கோட்டிவரை செல்லக்கூடியதாக இருக்கும். ஜோஷி மடத் துக்குச் செல்லவும் கூடும் என்றனர். அதை எதிர்பார்த்து மறுநாள் உந்தூர்தி கிடைப்பதாக இருந்தாலும் பதரி செல்லலாம் என்ற எண்ணத்தோடு அங்குள்ள அரசினர் தங்குவிடுதியில் தங்கியிருந்தோம். அன்றிரவு - மறுநாள் அதிகாலே என்றும் சொல்லலாம்.

அப்பகுதிகளில் கோடையில் அதிகாலே 4-30 மணிக்கே விடியத் தொடங்கிவிடும். மாலே 7-45—8 மணிவரை வெளிச்சம் இருக்கும். ஆகையால் அதை இரவு என்றும் சொல்லமுடியாது. நம் பக்கத்தில் உள்ளதை வைத்து அதை மறுநாள் என்றும் சொல்லமுடியாது அந்தநிலேயில் உள்ள பொழுது நல்ல அழகிய பெண்ணுெருத்தி - கன்னிப் பெண் வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானத்தின் பக்கத்தில் நின்று 'என்னேவிட்டு விலகிப் போகப்போகிருயா?' என்று கேட்டாள். 'இந்த இரவு நேரத்தில் என்னேத் தொந்தரவு செய்யாதே. பக்கத்தில் உள்ளவர்களேக் கேள்' என்று சொல்லி மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டார்கள். அப்பக்கத்திலும் வந்து நின்று முன் சொன்னதைப்போலவே கேட்டாள். 'முன்னமேயே சொல்லிவிட்டேன். பக்கத்தில் உள்ளவர்களேக் கேள்' என்று சொல்லி மறுபடியும் வேறு பக்கத்தில் திரும்பிப் படுத்து சயனம்கொண்டார்கள். அங்கும் வந்து முன் கேட்ட படியே கேட்டுநின்ருள். இவ்விதமாகப் பலமுறையும் நிகழ்ந்தது. உடனே ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானத்தில் நித்திரைவிட்டு எழுந்துபார்த்தால் அதுவரைநடந்ததெல்லாம் கனவிலே என்பது புலனுயிற்று. எல்லாம் நேரே நிகழ்ந்தவைபோலவே நிீனவில் பச்சையாக இருந்தன. பக்கத்தில் படுத்திருந்த என்னே விளித்து 'இவ்விதமாக நடந்தது; எல்லாம் திருவருள் செயலாகத்தான் இருக்கும். நாம் அப்படி விட்டு விலகிச்செல்ல நினேக்க வில்லேயே. உத்தேசித்தபடியேதானே செல்ல ஏற்பாடு

செய்கிறீர்கள். அதில் ஏதாவது மாற்றம்வந்துவிட்டதா ?' என்று வினவினார்கள். 'உத்தரவானபடியே செய்யத்தான் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். காலை 8, 9 மணிக்குள்ளாகவே ஏற்பாடாகிவிடும்' என்று தெரிவித்துக்கொண்டேன். 'அப்படி யானால்இந்தக் கனவில் தோன்றிச் சொல்லிப்போயதன் பொருள் என்ன' என்று உத்தரவாயிற்று. அதன்பொருள் விளங்கவில்லை

எல்லோரும் எழுந்து நித்ய கர்மங்களை முடித்துக் கொண்டு உந்தூர்தி நிலையத்துக்குச் சென்று முதல் நாள் அவர்கள் சொன்னபடியே எங்களுக்கு ஏற்பாடாகி விட்டதா ? எப்பொழுது உந்தூர்தி கிடைக்கும் என்று கேட்டதற்கு. 'எங்களுக்கே தெரியாது; இதுவரை மேலே சென்ற வற்றுள் 25, 30 வண்டிகள் திரும்ப வரவேயில்லை. இன்று காலை அவை வந்தால்தான் மேலே முடிவுசொல்லலாம் இல்லை யானால் எப்பொழுது ? என்று வரும் ? என்று எங்களாலேயே சொல்லமுடியவில்லை. கேதார வழியிலும் பதரி வழியிலும் பெருத்த மழை பெய்துகொண்டே இருக்கிறது. ஆற்றில் கடும் வெள்ளம் வரத் தொடங்கிவிட்டது. தாங்கள் போவதாக இருந்தால் எப்பொழுது உந்தூர்தி கிடைக்குமென்று உறுதி யாகச் சொல்லமுடியாது. பொறுத்துப்பார்த்தலே இப்பொழு துள்ள நிலையில் செய்யக்கூடியது' என்று சொல்லிவிட்டார்கள். விளக்கமாக இல்லை அவர்கள் சொன்னது. ஆகையால் விளக்கம் கேட்டோம். உச்சிப்பொழுதுக்குள் மேலே சென்றவை அன்று வந்தால் வழி எவ்விதம் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டு முடிவு சொல்லமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். இதை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திடம் தெரிவித்து மேலே எவ்விதம் செய்வதென்பதற்கு முடிவாக வேண்டியிருந்தது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றோம். நாங்கள் செய்தி தெரிவிக்கும் முன்ன தாகவே, 'விடியல் நேரத்தில் கண்ட கனவில் உத்தர வானதுதான் முடிவு' என்று உத்தரவாயிற்று. எங்களுக்கு விளங்கவில்லை. இந்த முறை நீ வரவேண்டாம். மறுமுறை வரலாம் என்றுதான் உத்தரவாயிற்று அதைச் சிந்தித்துப் பார்த்து இப்பொழுதுதான் முடிவுசெய்தோம். ஆகையால் இந்த யாத்திரையை இதோடு முடித்துக்கொண்டு இனி ஊர் திரும்பு வதற்குள்ள ஏற்பாடுகளைச் செய்யவும். திருவருள் உத்தரவு

அதுவானுல் நாம் வேறுவிதமாகச் செய்யமுடியுமா ? கனவிலே வந்து நம்மை ஆண்டவிதம் இது ' என்று திருவுள மகிழ்வோடு உத்தரவாயிற்று. நாங்களும் உந்தூர்தி நிலேயத்தில் தெரிந்து வந்தவற்றைத் தெரிவித்துக்கொண்டோம்.

அதன்படியே அன்று மாலே 3 மணிக்கு ருத்ரப்ரயாகை விட்டுப் புறப்பட்டு ஸ்ரீநகர் வந்து இரவு தங்கினேம். இந்த வழிகளில் இவ்யாண்டில் பல உந்தூர்திகள் வழிவிட்டு விலகி அலகநந்தாவில் விழுந்து உடைந்துவிட்டன. மக்கள் சேதமும் அதிகமாகவே இருந்தது ஆயிரக்கணக்கான மக்கள் பீப்பல் கோட்டி, ஜோஷிமடம், பதரி முதலிய இடங்களில் திரும்ப வசதி யில்லாமல் தங்கித் துன்புற்றனர். இந்த நிலேயில் ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானமும் அங்கு வந்து துன்பப்பட வேண்டாமே என்ற கருணேயினுல்தான் கனவில் வந்து உத்தரவாகியிருக்கிறது

திருவருள் துணேயையே நம்பி நிற்போருக்கு இது போலவே பல இடங்களிலும் தானே முன்னின்று உதவி செய்து வருகிறது அத்திருவருள். இதுபோல பல. பல யாத்திரைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானத்தோடு உடன்சென்று கண்டு அனுபவித்திருக்கிறேன். யாத்திரை நூல்களிலும் அந்த அனுபவங்களே விளக்கியும் இருக்கிறேன். இதுபோன்ற இன்ப அனுபவங்கள் இந்த யாத்திரையிலும் பல இடங்களிலும் நிகழ்ந்தன. அனுபவத்தில் அரிதாக உள்ளவை. விரிசகிற் பெருகும்.

ஸ்ரீ நகர் சென்றதும் ஹரத்துவாரத்துக்குச் செல்ல உந்தூர்தி திட்டம் செய்ய முயன்றேன். அந்த வழியிலும் சில இடங்களில் பழுதுகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவ்வழிச் சென்ருல் அங்கங்கும் இறங்கி நம் உடமைகளே சிறிது தொலே தூக்கிச் சென்று மாற்று வண்டிகளில் ஏற்றவேண்டியிருக்கும் என்று தெரிய வந்தது. மலே வழிகள் எல்லாம் ஒரு வழிப்பாட்டை அமைப்புடையவை. ஒரு புறம் ஆறும் மறுபுறம் மலேயும் இருக்கும். நடு நடுவில் எதிர்எதிர் செல்லும் தொகுதி வண்டி களும் சென்று சேர்ந்து நின்று அந்தந்தத் தொகுதியில் வர வேண்டியவை வந்த பிறகு அதுவும் அதனதன் வழியில் செல்ல

அனுமதிப்பது என்ற ஏற்பாட்டில் நடந்து வருகிறது. ஆகையால் நடுவில் உந்தூர்திகள் அந்தந்த வழியில் வரும்போழுது பாட்டையில் ஏதாவது பழுது ஏற்பட்டால் - இடிசல்கள் நேர்ந்து விட்டால் திரும்பி வந்தவழியே செல்லுதலும் அரிதாக இருக்கும் ஆகையால் வழி சரியாக இல்லாவிட்டால் அவ்வழியில் செல்லுவதைவிடுத்து வேறு நல்ல வழியாகச் செல்லுதலே சிறந்தது. இவ்வண்ணமே ஹரத்துவார் நேரே செல்லுவதை விட்டு கோட்துவாரா என்ற மாற்றுவழி வழியே திரும்ப வேண்டியதாக இருந்தது. இந்த வழி மலை உச்சிகளிலும் உயரவழிகளிலும் செல்லுவதால் இப் பகுதியில் சேதங்கள் கிடையாது. கோட்துவாரா வரை உந்தூர்தி; மேலே அங்கிருந்து இரயில் மூலமாக எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

அதுபோலவே கோட்துவாராவுக்கு உந்தூர்தியில் வந்து அங்கிருந்து இரயிலில் நாஜிபாபாத் வந்து அங்கு அன்றிரவு தங்கி மறுநாள் காலையில் புறப்பட்டு ஹரத்துவார் சென்றடைந் தோம். அங்கு மூன்று நாட்கள் தங்கிவிட்டு புது டில்லி வழியாக தருமைக்குத் திரும்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புதுடில்லிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியாவது தெரிந்ததும் புது டில்லித் தமிழர்கள் எல்லையிலே வந்து வரவேற்று அழைத்துச் சென்றார்கள். A. & F. ஹார்வி பிரதிநிதி திரு. வி. ஆறுமுகம். கிருஷிக்பவன் கிருஷிக் பத்திரிக்கை துணை ஆசிரியர் ஏ. எஸ். பி. ஷண்முகம், ஏ. ஸி. ஸி. செட்டியார், குஞ்சிதபாதம் முதலியார், மத்திய அரசாங்கக் கட்டிடங்கள் அதிகாரி, திரு. பாலசுப்பிரமணியம், இரயில்வே போர்டு துணை நெறியாளர் எம். வி. சங்கர், முதலிய பலரும் வந்திருந்தார்கள். மாலைகள் அணிவித்து அழைத்துச் சென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் தங்குவதற்கென அரசாங்க விடுதிகளில் யார்க் சாலை (இப்பொழுது மோதிலால் நேரு மார்க்) 7-ஆம் எண் கட்டிடத்தைத் திட்டம்செய்து தங்க வைத்தார்கள். டில்லித் தமிழ்ச் சங்கத்து செயலாளர்கள், விநாயகர்கோயில் திருப்பணிக் குழுவினர் முதலிய பல சங்கங்களின் சார்பிலும் வரவேற்க வந்தார்கள். அங்கு இரண்டு நாட்கள் தங்கிவிட்டு இரஜபுதனத் தில் உள்ள புஷ்கரம் என்னும் தலத்துக்கு எழுந்தருளியானார் கள். ஆஜ்மீர் நகரத்திலிருந்து 7 கல் தொலைவில் அமைந்தது அந்தத் திருத்தலம்.

பிரமன் பெருமானுடைய முடி காண்பேன் என்று சபதமிட்டு அன்னமாக விசும்பில் சென்று தேடியும் காணாது அயர்வுற்ற பொழுது திருமுடியிலிருந்து ஒரு தாழம்பூ வருவதைக்கண்டு 'நீ எங்கிருந்து வருகிறாய்' என்று வினவியதாகவும், தான் பெருமான் திருமுடியிலிருந்து மடலவிழ்ந்து விழுந்து வருவதாகவும், பல யுகங்களாக வந்துகொண்டிருப்பதாகவும் அம்மலர் சொன்ன தாகவும். இந்த நிலையில் தாம் எப்பொழுது முடி காண்பது என்று அச்சமுற்று அம்மலரைத் தனக்கு ஒரு உதவி செய்யக் கேட்டு அதுவும் ஏற்றுக்கொண்டதாகவும், அவ்விதமே இருவரும் சத்தியலோகம் சென்றதாகவும் பிரமனோடு போட்டி யிட்டு அடிகாணச்சென்ற திருமால் அது காணாது மயங்கி அந்த முயற்சியை கைவிட்டுக் களைத்துவந்ததாகவும் சத்திய லோகத் தில் உள்ள பிரமனிடம் தன்னால் அடிகாண இயலவில்லை இவர் முடிகண்டாரா என்று கேட்டதாகவும் 'ஆம் கண்டேன்' என்று பிரமன் சொன்னதாகவும் அதற்கு முடிமீதிருந்து எடுத்து வந்திருக்கும் இம்மலரே சான்று என்று புகன்றதாகவும் இவ்விதம் பொய் மொழிந்ததற்காகப் பிரமனுக்கு நிலவுலகில் எங்கும் இருப்பிடமே இல்லாது ஒழிந்துபோகப் பெருமான் சாபமிட்டதாகவும், தவறுணர்ந்து பெருமானை வேண்டிப் பிரமன் கடுந்தவம் இருந்ததாகவும் அதனால் சிருஷ்டித் தொழில் நின்று போகவே சரஸ்வதி, பூதேவி மற்றும் தேவர்கள் பலரும் வேண்டப் பெருமான் சத்தியஉலகம் தவிர வேறு இடங்களில் பிரமனுக்குக் கோயில் இல்லாது போக என்று மாற்றி அமைத்த தாகவும் புராணம். அவ்விதம் பிரமன் தங்கித் தவமியற்றிய பெருமையுடைதும் நிலவுலகில் சத்திய உலகமாக உள்ளதுமான பெருமை உடையது இத்திருத்தலம். விஷ்ணுபரமாகவும் திருமால் பதரியில் சிலா உருவிலும் புஷ்கரத்தில் ஜல உருவி லும். நைமிசாரண்யத்தில் தாருஉருவத்திலும் (மரங்களாக வும்) எழுந்தருளியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதமாக இருபெருஞ் சமய நிலையிலும் உயர்வுடையது இத்திருத்தலம். இங்குள்ள புஷ்கரத் தீர்த்தம் திருமுறைகளில் புஷ்கரணீ என்றழைக்கப்படுகிறது. அங்கு எழுந்தருளியாகி புஷ்கரத் தீர்த்தத்தில் திருமஞ்சனமாகி அதன் அருகில் உள்ள பிரமன் கோயிலில் தரிசனம் செய்து கொண்டு மீண்டும் டில்லிக்கு எழுந்தருளினார்கள்.

புஷ்கரத்தில் பெரும்பணக்காரர் ஒருவர் நம் தமிழ்நாட்டுக் கோயிலமைப்பில் ஸ்ரீரங் மந்திர் என்ற வைணவாலயம் ஒன்று கட்டியிருக்கிறார். தமிழ்நாட்டு விஷ்ணு காஞ்சியிலிருந்து வைணவப் பூஜகர்களையும் உதவிக்கு வேண்டிய வைணவப் பிராமணர்களையும் அங்கு அழைத்துச்சென்று தங்கவைத்திருக்கிறார். கட்டிட அமைப்பும் பூஜைகள் முதலிய வைதிக காரியங்களும் நம் தமிழ்நாட்டில் உள்ளபடியே இருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் அங்கு தரிசனத்துக்கு எழுந்தருளியானதும் அங்குள்ள வைதிகர்கள் பலரும் தக்க முறையில் தரிசனம் செய்துவைத்து மரியாதைகளும் செய்தனர். சாம்பார் சாதமும் தயிர் சாதமும் இன்ன பிற நைவேதனப் பொருள்களும் அளித்து மகிழ்ந்தார்கள். உடன்வந்த ஓதுவார் குரலினிமையோடு இசை அமைப்பில் பாசுரங்கள் பாடியதைக் கேட்டு மிக மகிழ்ந்தார்கள். அன்று தங்கி மறுநாள்தான் போதல்வேண்டும், தங்களை ஒத்த தமிழ்ப் பெரியார்களை நாங்கள் இங்கு கண்டு பல நாட்களாயின. தங்களுக்குக் காட்சி நல்கித் தங்குதல் வேண்டும் என்று மிகவும் அன்போடு உபசரித்தனர். மறுநாள் டில்லியில் இருக்கவேண்டியிருந்தபடியால் அவர்களிடம் பிரியாவிடை கொண்டு திரும்பினோம்.

டில்லித் தமிழ்ச்சங்கத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்திற்கு வரவேற்பு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்தியப் பேரமைச்சர் டாக்டர். திரு. சுப்பராயன் அவர்கள் அந்தச் சிறப்புக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்கள். மத்திய அரசு போது மராமத்து இலாகாவினரின் போது மண்டபத்தில் அக்கூட்டம் நடைபெற்றது. டில்லியில் உள்ள பல தமிழர்கள் அங்கு வந்து கூடியிருந்தார்கள். கட்டிட முகப்பிலேயே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்குப் பூரணகும்ப மரியாதையோடு வரவேற்றார்கள். சங்க உறுப்பினர் பலரும் வந்திருந்தார்கள். துணைத் தலைவர் டாக்டர் திரு. பா. நடராஜன் அவர்களும், டில்லி சர்வகலாசாலை தமிழ்த்துறைத் தலைவர் திரு. ஆறுமுகம், எம். ஏ. அவர்களும் வரவேற்புரை சொன்னபிறகு மத்திய அரசாங்க அமைச்சர் கனம். டாக்டர் திரு பி. சுப்பராயன் அவர்கள் தலைமையுரையாகச் சில சொன்னார்கள்.

திரு. ஆறுமுகம் அவர்கள் தருமையாதீனத்தில் செய்துவரும் அரியதொண்டுகளையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்தின்

ஆட்சியில் அது மிகவும் சிறப்புற்று விளங்குவதையும் மொழிக்குச் சிறப்பாகப் பல தொண்டுகள் செய்துவருவதையும் அவற்றுள் செந்தமிழ்க் கல்லூரி, திருமுறை உரை முதலிய வற்றையும் சமய சாத்திர வகுப்புக்கள், திருக்குறள் உரை வளம், முதலிய நூல் வெளியீடுகள் இவற்றை விரித்தெடுத்து பாராட்டினூர்கள். கிருஷிக்துணை ஆசிரியர் திரு. ஷண்முகம் M.A. அவர்கள் வரவேற்புமலர் வாசித்தளித்தார். டாக்டர் திரு. பா. நடராஜன் அவர்கள் பேசுகையில் தமிழ்நாட்டில் நமது சமய நிலையங்கள் செய்துவரும் மொழித்தொண்டு, சமயத்தொண்டு, மக்கள் தொண்டுகளை விரித்துரைத்து அதில் சிறப்பாகத் தருமை யாதீனத்தில் செய்துவரும் சிறப்புத் தொண்டுகளையும் போற்றிப் புதுடில்லியில் மிக எளிதாகக் காட்சி வழங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் தருமையில் எழுந்தருளியாகிவிட்டால் எவ்வளவு சிறப்புடையவர்களாகக் காணப்படுவார்கள். அவ் விதம் அங்கு அவர்களுக்குப் பல வேலைகள் இருந்துகொண்டே இருக்கும். அதிலும் அங்கும் இதுபோலவே காட்சிக்கெளியராய் செஞ்சொல் இனியராய், அரும்பெருங் கருத்துக்களையும் கேட்போர் பிணிக்கும் தகையவாய் அருளும்பான்மை உடைய ராயும் எல்லோரையும் தம்வயப்படுத்தும் பண்பாளராயும் திகழ் கிருர்கள் என்று எடுத்து மொழிந்தார்கள். மத்திய அரசாங்க அமைச்சர் கனம். டாக்டர் திரு. பி. சுப்பராயன் அவர்கள், தாம் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தருமைக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்துக்கு பொதுமக்கள் பலர் சேர்ந்து செய்து மகிழ்ந்த கனகாபிஷேக விழாவில் பங்குகொள்ளும் பாக்கியம்பெற்றிருந்ததாகவும் தமிழ்மக்களின் உள்ளத்தில் சிறப் பாக இடம்பெற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை டில்லித் தமிழர்கள் வரவேற்கும் இவ்வைபவத்திலும்தாம்பங்குகொள்ளும் சிறப்புத் தமக்கு இப்பொழுது வாய்த்திருப்பதாகவும் தமிழர்கள் எங்குச் சென்ருலும் சிறப்பாக வாழத்தெரிந்தவர்கள் அதிலும் தமிழர் ஓரினம் என்ற உணர்வோடு சாதி சமய வேறுபாடின்றி வாழ்ந்துவருவதாகவும் இது சிறப்பேயானுலும் நம் நாட்டுப் பிரதமர் கனம். நேரு அவர்கள் சொல்லிவருவதுபோல நாம் இந்தியர் என்ற உணர்வோடுவாழவேண்டும். தமிழர், தெலுங்கர், மராட்டியர் என்ற இன உணர்வுகள் தலையெடுக்கக்கூடாது என்றும் சொன்னூர்கள்.

தில்லித் தமிழ்ச்சங்கத்தில் அருளிய உபதேசம் :

தமிழ்மொழி இனிமை உடையது. அதுபோலவே இசைபட வாழத் தெரிந்தவர்கள் தமிழர்கள். உலகில் எப்பகுதிக்குச் சென்றாலும் நம் தமிழர்கள் அங்கங்கும் சிறப்பாக அந்தந்த நாட்டில் மற்றவர்களோடு ஒன்றி வாழத்தெரிந்தவர்கள். நமது பண்பாடு குன்றாது வாழவேண்டும். விருந்தோம்புதலில் சிறந்தவர்கள் நம்மவர்கள். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர்கள். நாம் இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்வதால் நாம் தமிழர், பண்பாட்டால் சிறந்தவர்கள், நல்லன நினைப்பாலும் செயலாலும் செய்து மகிழ்ந்து வாழ்பவர்கள் என்ற சிறப்புக்களை மறத்தல் வேண்டாம். நல்லன செய்தல் என்றால் யாருக்குமினியராக இருக்கத் தெரிந்தவர்கள். அன்புத்தொண்டு செய்யத் தெரிந்தவர்கள். அன்பு என்றதும் அது அறவழி அன்பையே குறிக்கும். அறவழி அன்பு செய்பவர்கள் உள்ளத்தில் இயற்கையான பக்தி நிறைந்திருக்கும். அரனடி அன்பைத்தான் தலைசிறந்த அன்பு எனலாம். மற்றதெல்லாம் குறிக்கோள் உடையன. ஆகவே அடியவர்களிடம் அன்புகொள்ளுதல் வேண்டும். அரனடி அன்புடையவர்களாக இருத்தல்வேண்டும். அவ்விதம் அரனடிக் கன்பில்லாதவர்கள்தான் பிற உயிர்களிடத்து அன்புடையவன் என்று சொன்னால் அது பொருந்தாது. ஈசனுக்கு அன்பில்லார் பிறர்க்கும் அன்பில்லார். தமக்கும் அன்பில்லார். இவர்கள் எவ்விதம் அன்புடையவர்களாக இருப்பார்கள். ஆகவே நம்மவர்கள் யார் யார் எவ்வெவ்விதப்பணி மேற்கொண்டிருந்தாலும் ஒரு சிறிது நேரமேனும் கடவுட்சிந்தனை உடையவராக இருத்தல் வேண்டும். அது குறைவுபடாது சிறப்பாக நடத்தி வருதல் வேண்டும். அப்பொழுதுதான் பிற உயிர்களிடத்து அன்புடைமை பிறர் நலம் பேணும் சிறப்பு எல்லாம் வந்தமையும். திருவருள் நம்பிக்கையோடு அரனடி அன்பு வழுவாதுவரும் நெறியே நல்ல நெறியாகும். வாழ்விலும் சிறந்து வாழலாம்.

வடநாட்டில் நம் தமிழர் வாழும் பகுதிகளில் தமிழ்ச் சங்கங்கள் மிக நல்ல முறையில் இயங்கிவருகின்றன. அவற்றுள் டில்லிமாநகரிலே அமைந்துள்ளது மிகச் சிறப்புடன் அமைந்திருக்கிறது. ஆனாலும் கட்டிடம்தான் அமையவில்லை. இப்பொழுது எனக்கு வரவேற்புக்கூற தமிழ்ச் சங்கத்தார் வேறொரு

இடம் தேடவேண்டிவருகிறது. இதுபோன்றே பல சிறப்புக் கூட்டங்கள் நடைபெறும்பொழுதும் இதற்காக அல்லல்பட வேண்டியிருப்பதாக அறிகிறோம். இக்குறை இருத்தல் சிறப் பாகாதல்லவா ? ஆகவே தமிழ்ச் சங்கத்துக்கு என ஒரு நல்ல கட்டிடம் இருத்தல்வேண்டும். இப்பொழுதுள்ள கட்டிடத்தை விரிவுபடுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ முடியாது. ஆகையால் மத்திய அரசில் ஒரு இடம் வேண்டிப் பெற்று அதில் ஒரு நல்ல நிலையான எல்லா வசதிகளும் அமைய கட்டிடம் கட்டவேண்டும். அதற்கு இடம் பெறுவது சங்க உறுப்பினர் களால் முடியக்கூடியதே. பலரும் நல்ல உயர்தர பதவிகளில் இருப்பதால் செயல்படுத்த முடியும் என்பதை நாம் அறிவோம். நமது அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் இங்கேயே இருக் கிறார்கள்.

இந்தச் சங்கத்தின் வளர்ச்சியில் ஆர்வம் மிக உடைய வர்கள். அவர்களைக் கொண்டே அதைச் செய்துகொள்ள முடியும். ஆகவே செய்தலும் வேண்டுவதே. திருவருள் துணை செய்ய விரைவில் இங்கு தமிழுக்கு ஒரு மன்றக் கட்டிடம் அமைந்துவிடும் என்று நம்பிக்கை இருக்கிறது. அதறகாக நாமும் ஒரு சிறிது துணைசெய்தல்வேண்டும் என்று தோன்று கிறது. அதை நமக்காக நமது அன்பர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் அளிப்பார்கள். பெற்றுக்கொண்டு இன்று தமிழுக்கு ஒரு கட்டிடம் - ஒலிபெருக்கி முதலிய எல்லா சிறப்புக்களுடனும் ஒரு சிறந்த அரங்கம் அமைக்கவேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டு விரைவில் ஒன்று எழுப்பிவிடவேண்டும். நமது நாட்டின் தலைநகரிலே நமது மொழிக்கு நமது கலாசாரத்துக்கு சிறப்பாக அமைத்து விளங்க வேண்டும். எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கேசன் திருவருள் துணை செய்யும். வாழ்க. வளர்க.

இவ்விதம் அருளிச்செய்து திரு. சுப்பராயன் அவர்களிடம் ரூ. 1001/ வெண்பொற்காசுகள் அளித்துச் சங்கச் செயலாள ரிடம் வழங்கச் செய்தார்கள். உடனே கனம் அமைச்சரவர்களும் தாமும் இந்த நல்ல பணிக்கு ரூ. 1001/- வழங்குவதாகவும் ஆக ரூ. 2002/- இப்பொழுதே சேர்ந்துவிட்டது என்றும் இதே போல எல்லாத் தமிழ் அன்பர்களும் அன்புகொண்டு உதவி

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் வழங்கிய ஆசியை, திருக்கை வழக்கத்தை மெய்ப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சங்கச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது. கூட்டத் தொடக்கத்தில் தருமையாதீனம் திரு. சா. திருஞானசம்பந்த ஓதுவாமூர்த்திகள் திருமுறையை இனிமையாக ஓதினார்கள். அதன் இனிமையைக்கண்டு பலரும் பாராட்டினர்.

இவ்விதமாக வடநாட்டு யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் 17—7—61 திங்கள் இரவு தருமைக்கு எழுந்தருளினார்கள். சென்னை வழியே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியாகும் செய்தி தெரிந்ததும் அங்ஙகர மக்கள் பலரும் ரயிலடியிலே வந்து கண்டு மலரிட்டு வணங்கி வரவேற்று அருட்பூதி பெற்று மகிழ்ந்தார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Sri Vaidyanatha is my kula Deivam among my family, I have been offering worship in the shrine. I must express my gratitude for the consideration and attention paid to me and to my family by the employees of the Devasthanam, by the Curukkals and by all. Swamiji is very kind. The grace of Lord Vaidyanatha and Sri Muthukumaraswami is manifested in every action of the temple people.

Sd. S. Narayanaswami Iyer,
Advocate & Government Pleader,
Tiruvarur.

25—6—61.

உ

தில்லிக் கடிதம்

வை. ஆறுமுகம்

146, Jorbagh,
New Delhi - 3,
31st July 1961.

தங்கள் 26—7—61 கடிதங்கள் இரண்டும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் ஆசிக்கடிதமும், திருக்கடவூர் மிருத்யுஞ்சய ஜெபப்பிரசாதங்களும் 29—7—61 சனிக்கிழமை மாலை அலுவலகத்திலிருந்து வீடுசென்ற பொழுது கிடைக்கப் பெற்றேன். உடனே தகுந்த அதிகாரிகளுக்குத் தொலைபேசியில் பேசி ஞாயிற்றுக்கிழமை 30—7—61 மாலை 6-30 மணிக்கு கனம். டாக்டர், ராஜேந்திரபிரசாத் அவர்களைப் பார்ப்பதென்று முடிவு செய்து கொண்டேன். அதன்படி ஞாயிறு மாலை திரு. சண்முகம் செட்டியாரையும் திரு. நெல்லையப்ப பிள்ளை யையும் உடன் அழைத்துக்கொண்டு ஆதீனப்பிரதி நிதியாக உடை உருவத்திலும் தோற்றம் ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் கொடுத்தருளிய பட்டு ஆடைகளை உடுத்திக்கொண்டு பெரிய வெள்ளித் தட்டில் தேங்காய், புஷ்பம். பழவகைகள் வெற்றிலை பாக்கு, மஞ்சள் எல்லாம் எடுத்துக்கொண்டு "Mutt & Temples" என்ற புஸ்தகத்தையும் தட்டில் வைத்து. ஆதீன விபூதிப்பைகளில் ஒன்றையும் வைத்து, ஆசி அனுப்பிய உறையுள்ளுக்கு மஞ்சள் நான்குஓரங்களிலும் பூசி, பட்டுப்போட்டு மூடி உகந்தமுறையில் Dr. Sen Nursing Home க்கு எடுத்துச் சென்றோம். சிவனடியார் கள் கூட்டம்போல் நாங்கள் உள்ளே சென்றபோது எங்களை யாவரும் பணிவுடன் வணங்கி நேராக கனம். ஜனாதிபதி அவர்கள் இருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் அழைத்துக் கொண்டுபோய் தங்கவைத்தார்கள். கனம். ஜனாதிபதியின் மகனும் மற்றும் உயர்தர அலுவலர்களும் எங்களைப்பற்றி விசாரித்தனர். மடத்தின் பெருமைகளைப் பற்றியும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் பெருமைகளைப் பற்றியும் மிருத்யுஞ்சய ஜெபவிசேஷத்தையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். பின்னர் கனம். ஜனாதிபதி அவர்கள் கண்விழித்திருக்கும் சமயத்தில் என்னைமாத்திரம் உள்ளே அழைத்துச் சென்றனர்.

என்னைப் பார்த்த அளவில் கனம். ஜனாதிபதி அவர்கள் இரு கரங்களையும் சிரமேற்குவித்து பக்திசிரத்தையுடன் வரவேற்ற காட்சி என்னை உருக்கிவிட்டது. ஒருசில வினாடிகள் எனக்குப் பேச முடியாது போய்விட்டது. (Dy. Mil. Secy. Col. Reddy என்னுடன் இருந்தார். அவர் என்து நண்பர். இவர் மூலமாகத் தான் இந்த ஏற்பாடுகள் செய்திருந்தேன்.) பிறகு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு சொன்னேன்.

" His Holiness Dharmapuram Mahanji had arranged special Poojas and Prayers in all His 27 temples. A special 'Miruthyanja' pooja was conducted at Tirukkadavur where Lord Shivji gave enternal life for Markandeya. The prasadams and message from His Holiness are herewith submitted to you Sir "

அவர் இருகரங்களாலும் மும்முறை, நான்நீட்டிய தட்டைத் தொட்டுக் கும்பிட்டார். பின்னர் திருமகனார் தட்டை வாங்கிக் கொண்டு வேறு பக்கத்தில் உள்ள அறைக்குச் சென்றுவிட்டார். உடனே கனம் இராஜேந்திர பிரசாத்திடம் நான் விடைபெறும் போது " Wish you speedy recovery ஓம் நமசிவாய " என்று சொல்லிக்கொண்டு வெளி ஏறினேன். அது சமயமும் அவர்கள் இருகரங்களையும் சிரமேற் குவித்து வணங்கி நின்றார்கள். இப்பெருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கே அன்றி எனக்கல்ல என்பதை நன்கறிவேன்.

இது சம்பந்தமாக நான் அனுப்பிய தந்தி " Prasadams delivered in person " இதுவரை கிடைத்திருக்கலாம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கு எனது பணிவன்புடன்கூடிய வணக்கங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அன்புள்ள,
வை. ஆறுமுகம்.

பிறகு திருப்பிரசாதத்தை அவர் மகனார் கனம். ஜனாதிபதி அவர்கட்கு இட்டதாகவும், ஆசிச்செய்தியை வாசித்துக் காட்டிய தாகவும் பின்னர் அறிந்துகொண்டேன்.

புதுடில்லியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு ; மத்யஅரசாங்கஅமைச்சர் கனம். டாக்டர். திரு. சுப்பராயன் அவர்களும் மற்ற அன்பர்களும்.

புஷ்கரத்தில் ;



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்

செய்திகள்

ஆதீன தேவஸ்தானங்களில் ஆடிப்பூரத் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கும் சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கும், திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவரசுவாமிதேவஸ்தானத்தில் ஸ்ரீஅபிராமி அம்பாளுக்கும் பிலவஆண்டு ஆடித்திங்கள் 20 ஆம் நாள் (4—8—61) வெள்ளிக்கிழமை முதல் ஆடிப்பூரத் திருநாள் தொடங்கி சிறப்புற நடைபெறுகிறது.

சீகாழி, வேளூர் ஆகிய இருதேவஸ்தானங்களிலும் திருவிழா நாட்களில் மாலை 6 மணிக்கு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. அன்பர்கள் பலர் கண்டும் கேட்டும் மகிழ்கின்றனர்.

தருமபுரத்தில் ஏகதின லக்ஷார்ச்சனை

தருமபுரத்தில் திருக்கோயில்கொண்டு அருள்வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு ஆடித்திங்கள் வெள்ளிக்கிழமைகளில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் காலை முதல் தொடங்கி ஏகதின லக்ஷார்ச்சனைகளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் சிறப்புற நிகழ்ந்தன. அன்பர்கள் வந்து கண்டு களித்தனர்.

தருமையாதீன தேவஸ்தானங்களில் வெள்ளத்தால் அவதியுற்றோர்க்கு உதவி

திருவையாற்றில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான, திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்,

திருவையாற்றுக்கு அண்மையிலுள்ள குடிமக்கள் பலர் ஆடுமாடு முதலிய கால்நடைகளுடன் வந்து குடியேறினர். திருவையாற்றைச் சூழ்ந்த பகுதிகளில் வெள்ளம் கடுமையாகத் தாக்கியதை அறியாதார் இரார். அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டநாட்களில் 7—7—61 முதல் 10—7—61 முடிய உள்ள நாட்களில் நாள்தோறும் சுமார் 3000 பேருக்கு உணவு அளிக்கப்பட்டது. சாம்பார்சாதம் போட்டும், கஞ்சிவார்த்தும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன. கோயிலில் தங்கியவர்களின் ஆடுமாடு முதலிய கால்நடைகளும் வைக்கோல் முதலியன போட்டு பாதுகாக்கப்பட்டன.

திருப்பனந்தாளில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு முதலியன அளித்து உதவி செய்யப்பட்டது.

திருப்பனந்தாளுக்கு மேற்கே ஐந்து மைல் தூரத்தில் கோள்ளிடத்தில் ஏற்பட்ட உடைப்பால் வெள்ளம் 8—7—61 காலை மட்டியூர் முதலிய கிராமங்களுக்கு வந்துவிட்டது. சாலைகளில்கூட 3 அடி தண்ணீர் சென்றது. அப்பக்கத்துக் கிராம மக்கள்-மட்டியூர் கிராமத்து மக்கள் எல்லோரும் சாமான்களுடனும், ஆடு மாடுகளுடனும் திருப்பனந்தாளில் குடியேறினார்கள். அவர்களுக்கு 8—7—61 மாலை முதல் 12—7—61 வரை உணவு அளிக்கப்பட்டது. கஞ்சிவார்க்கப்பட்டது. பிரசாதங்களும் கொடுக்கப்பட்டன. சுமார் 400 மக்கள் உதவி பெற்றனர். அவர்களுக்குக் கோயிலிலும் கட்டளை மடத்திலும் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டது. ஆடுமாடு முதலியவைகளும் வைக்கோல் முதலியன போட்டு பாதுகாக்கப்பட்டன.

கோள்ளிடம் உடைப்பை அடைக்க தேவஸ்தானத்து ஆட்களும் அனுப்பப்பட்டார்கள். இரவு பகலாக வேலை செய்து உடைப்பை அடைத்தனர்.

திருபுவனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

வெள்ளத்தால் அவதியுற்றோருக்கு உணவு அளிக்கப்பட்டது. கும்பகோணத்தில் வெள்ளம் புகுந்ததால் அங்கிருந்து திருபுவனத்திற்குக் குடியேறிய சுமார் 1200-க்கு 12—7—61 அன்று பகலில் உணவு அளித்து உதவி செய்யப்பட்டது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசாரமும், வழிபாடும் 17, 18—6—61 தேதிகளில் திருவாமாத்தூர், திருத்துறையூர், திருப்புறவார்பனங்காட்டூர் ஆகிய தலங்களில் சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் 17—6—61 மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு அன்று இரவு 9 மணிக்குத் திருவாமாத்தூரை அடைந்தனர். சிவபுராணம் ஓதி திருக்கோயில் வலம்வந்தனர். ஸ்ரீ அபிராமேசுவரர் சந்நிதியில் அவ்வூர்த் தேவாரப் பதிகங்களை நிலையத் திருமுறைவகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமிநாதன் இசையோடு ஓதினார். ஒவ்வொரு சந்நிதியிலும் பக்திப்பாடல்களைப் பாடி வழிபாடு நிகழ்த்தினர். வழிபாட்டின்பின்னர் திருக்கோயில்மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. ச. சிவகுமாரன் அவர்கள் வழிபாட்டின் சிறப்பைப்பற்றியும், புலவர் திரு. N. R. முருகவேள் அவர்கள் ''ஆமாத்தூர்த் தேவாரச்சிறப்பு'' பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். உலகியல் நலங்களை அனுபவிப்பதற்கு ஒருவருக்குத் தகுதி இன்றியமையாததுபோல இறை இன்பம் அனுபவிப்பதற்கும் ஒவ்வொரு உயிரும் தகுதி அடைய வேண்டியது அவசியமாகிறது என்றும் அத்தகுதி இறை வழிபாட்டினால் பெறலாம் என்றும் ஸ்ரீமத் சுவாமிகள் தமது தலைமையுரையில் கூறினார்கள். வித்துவான், திரு. தண்டபாணி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தர்மகர்த்தர் திரு. தி. கு இராமசாமி முதலியார் நன்றி நவின்றார். திருக்கோயில் அறங்காவலர்களும், ஊர்ப் பொதுமக்களும், சிவாசாரியர்களும் குழுவினரைப் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாடு

நிகழ்த்திவைத்து உணவளித்து உபசரித்தனர். இரவு விழுப்புரம் பக்தமார், சேட்டிமார் நந்தவனத்தில் உள்ள மாணவர் விடுதியில் தங்கி வைகற்போழுதில் நீராடிப் பூசை நிகழ்த்தி 18—6—61 காலை 9 மணியளவில் திருத்துறையூர் சேர்ந்தனர். தேவஸ்தானத் திருப்பணிக் கமிட்டியினரும், ஊர்ப் போதுமக்களும், சிவாசாரியர்களும் பூர்ணகும்ப மரியாதையோடு குழுவினரை வரவேற்றனர். கோயில் திருப்பணி நடைபெறுவதால் மூர்த்திகள் யாகசாலையில் பாலாலயம் செய்துவைக்கப் பட்டிருந்தன. பாலாலயஞ் செய்துவைத்துள்ள இக்கோயிலிலும், திருஉருவம் உள்ள இடங்களிலும் முறையாக வழிபாடு நிகழ்ந்தது. சுவாமிசந்நிதியில் அத்தலத் தேவாரப் பதிகத்தினை திரு. P. சுவாமிநாதன் உளமுருக ஓதினுர். பிறகு ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயத்திற்குச் சென்று வழிபாடு நிகழ்த்தினர்.

வழிபாட்டின் பின்னர் திருப்பணிக் கமிட்டியினர் சார்பில் திரு. கா. மு. இராமசாமிச்சேட்டியார் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்துஉபசரித்தார். திருப்பணிக்கோட்டகையில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் "தவநேறி" என்பதுபற்றிப் புலவர். திரு. N. R முருகவேள் பேசுகையில் தபு என்ற சோல்லடியாகப் பிறந்தது தவம் என்ற சோல் என்றும், தபு என்பதற்குக் கேடுதல் என்பது போருள் என்றும், தீமை கேட்டு நன்மை பேருக வழிசேய்வதே தவநேறி என்றும், இந்நேறியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தில் தேவாரம்பாடிப்பேற்றுர்கள் என்றும் குறிப்பிட்டார்கள். திரு. கா. மு. இராமசாமிச் சேட்டியாரவர்கள் குழுவினரை வரவேற்று நன்றிநவின்றுர்கள். ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் தலைமையுரையில் சந்தானகுரவர்களில் இரண்டாவது ஆசாரியராகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அவதரித்து அடக்கமான சிறப்பும், சுந்தரர்க்குத் தவநேறி நல்கிய சிறப்பும் உடைய இத் தலத்தைத் தரிசிப்பதால் நமக்கும் தவநேறி சித்திக்குமேன்றும், இத்தகைய சிறப்புவாய்ந்த திருக்கோயில் திருப்பணிக்குச் சைவப் பேருமக்கள் போருள் உதவி திருப்பணியை நிறைவேற்றித் திருவருள் பேறவேண்டுமேன்றும் குறிப்பிட்டார்கள். அதன் பின்னர் திருஅதிகைப் பேருமானுல் சுந்தருக்குத் திருவடி தீட்சை சேய்யப்பேற்ற சித்தவடம் திருக்கோயிலுக்குச்

சென்று வழிபாடியற்றினர். சுவாமி சந்நிதியில் சுந்தரர் அருளிய "தம்மானே அறியாத" என்ற திருப்பதிகத்தை P. சுவாமிநாதன் இசையுடன் ஓதினுர். பிறகு சுந்தரருக்குத் திருமணம் நிகழ இருந்ததும், தவிர்த்ததுமான மணவந்தபுத்தூர் சென்று அங்குள்ள ஸ்ரீ மீனுட்சிசுந்தரேசர் கோயிலில் வழிபாடியற்றினர் இவ்விரு கோயில்களிலும் அறங்காவலர்களும், ஊர்ப் பெரு மக்களும் குழுவினரை வரவேற்று வழிபாடு நிகழ்த்திவைத்து சிற்றுண்டி அளித்து உபசரித்தனர். பொதுமக்கள் பலரும் வழிபாட்டிற் கலந்து சிறப்புற்றனர்.

அதன் பின்பு திருப்புறவார் பனங்காட்டூர் சென்றனர். ஊர்ப் பொதுமக்களும், கோயில் அறங்காவலர் திரு. பழநிசாமி முதலியாரவர்களும் குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். குழுவினர் ஒவ்வொரு சந்நிதியிலும் தேவாரப் பாடல்களைப் பக்தியுடன் பாடி வழிபட்டனர். சுவாமிசந்நிதியில் அத்தலத் தேவாரப் பதிகத்தினை திரு. P. சுவாமிநாதன் இசையோடு ஓதினுர். பிறகு திருக்கோயில் முன் மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அக்கோயில் அறங்காவலர் திரு. பழநிசாமி அவர்கள் குழுவினரை வரவேற்றுப் பேசுகையில் தாம் தி. மு. கழகத்தில் இருந்ததையும், ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகளாலும், தேவியினுடைய அருள் நிகழ்ச்சியாலும் சமய வாழ்வு மேற்கொண்டதையும் உருக்கமுடன் எடுத்துக்கூறினுர்கள். புலவர் திரு. முருகவேள் அவர்கள் அவ்வூர்த் தேவாரம் பற்றிப் பேசினுர்கள். ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் தலைமையுரையில் மன ஒருமைப்பாட்டுடனும், உண்மையான பக்தியுடனும் இறைவனைத் துதித்தால் ஆண்டவன் அருள்வான் என்பதை இவ்வூர்த் தேவாரம் பாடல்தோறும் அறிவிப்பதை விளக்கிப் பேசினுர்கள். கோயில் அறங்காவலர் திரு. பழநிசாமி முதலியாரவர்கள் குழுவினருக்கு மாகேசுவரபூசை செய்து வைத்து உபசரித்தார்கள்.

பிறகு குழுவினர் மாலை 6 மணிக்கு விழுப்புரம் செட்டியார், பக்தமார் நந்தவனத்தில் அமைந்துள்ள மாணவர் வீடுதியில் அவ்வூர் வார வழிபாட்டுக் கழகத்தினர் ஏற்பாடு செய்த சிறப்புக் கூட்டத்தில் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான்

சுவாமிகள் அவர்கள் தலைமையில் திரு. முருகவேள் அவர்கள் "வாரவழிபாட்டின் அவசியம்" பற்றிப் பேசினார்கள். ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் தலைமையுரையில் இன்றையதினம் மாணிக்க வாசகசுவாமிகளின் குருபூசை நன்னாள் என்றும், இந்நாளில் மாணிக்க வாசகரின் அருட் செயல்களையும், திருவாசகப் பாடல் களையும் சிந்தித்து ஓதுவது சைவர்களின் தலையான கடமை என்றும் குறிப்பிட்டார்கள். வித்துவான், திரு. ஆறுமுக முதலியாரவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள்.

மேற்கண்ட வழிபாடு சிறப்பாக நடைபெற முயற்சியோடு ஒத்துழைத்த விழுப்புரம் தமிழாசிரியர் வித்துவான். ந. ஆறுமுக முதலியாரவர்கட்கும், திருவதிகை வித்துவான். திரு. ர. சண்முக சுந்தர தேசிகரவர்கட்கும், மற்ற அறங்காவலந்தொண்டர்கட்கும் ஸ்ரீமத். சுவாமிகள் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

மாதாந்தர வழிபாடு

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார மும், வழிபாடும் 8—7—61 இல் நடுநாட்டுத் தலங்களாகிய கூடலையாற்றூர், இராஜேந்திரபட்டணம் என வழங்கும் திருஎருக் கத்தம்புலியூர், விருத்தாசலம் என வழங்கும் திருமுதுகுன்றம் ஆகிய தலங்களிலும், 9—7—61 இல் திருநெல்வாயிலரத்துறை, திருப்பெண்ணாகடம், திருநெல்வெண்ணெய் ஆகியதலங்களிலும் சிறப்பாக நடைபெற்றன. 8—7—61 நண்பகல் கௌஞ்சியப்பர் என வழங்கும் முருகன் கோயிலில் குழுவினர் வழிபாடு நிகழ்த் தினர்.

அக்கோயில் அறங்காவலர்களாகிய வக்கீல் நாராயணசாமி பிள்ளை, தினத்தாள் நிருபர் நாராயணசாமி பிள்ளை, ஊர்ப்போது மக்கள் ஆகியோர் பூர்ணகும்பத்துடன் வரவேற்று உடனிருந்து வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்ததோடு அனைவருக்கும் குளிர்பானம் வழங்கி உபசரித்தனர். விருத்தாசலம் தேவார பாடசாலை உரிமையாளர் திரு. அ. இரத்தினசபாபதி செட்டியார் மேற்படி பாடசாலையில் குழுவினருக்கு மாகேசுவரபூசை செய்து உபசரித்தார்கள். மாலை திருக்கூடலையாற்றூர் சென்று வழிபாடு நிகழ்த்தினர். அக்கோயில் அறங்காவலர் திரு. இரட்டை

அ. ரு. அருணசலஞ் செட்டியார் அவர்களின் ஏஜண்டு திரு. சிற்சபாநாதம் பிள்ளை, வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. தனபாலு, ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நிகழ்த்தி வைத்ததுடன் சிற்றுண்டி அளித்து உபசரித்தனர். திருக்கூடலையாற்றூரின் சிறப்புப் பற்றியும், வழிபாட்டின் அவசியம் பற்றியும் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

பிறகு குழுவினர் திருஎருக்கத்தம்புலியூர் சென்று வழிபாடியற்றினர். அக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. நடராஜன், ஊர்ப்பொதுமக்கள், சிவாசாரியர் ஆகியோர் பூர்ணகும்பத்துடன் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். அவ்வூர்த் திருக்கோயில் பழுதுற்றிருப்பதைத் திருப்பணி செய்ய வேண்டுவது பற்றியும், அவ்வூரில் அவதரித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், தேவாரத்திற்குப் பண் வகுத்த மதங்கசூளாமணியார் ஆகியோர்பற்றியும் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். அன்று இரவு திருமுதுகுன்றத்தில் குழுவினர் வழிபாடு நிகழ்த்தினர். அக்கோயில் அறங்காவலர் திரு. S. S. சங்கரபாண்டிய நாடார், நிர்வாக அதிகாரி திரு. மகாதேவ அய்யர், ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரை மங்கலவாத்திய முழக்கத்துடன் வரவேற்று உடனிருந்து தரிசனம் செய்துவைத்தனர். வழிபாட்டின் பின்னர் அத்திருக்கோயில் வரலாற்றுச் சிறப்பினையும், அவ்வூர்த் தேவாரச் சிறப்பினையும் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நிர்வாக அதிகாரி திரு. மகாதேவ அய்யர் வரவேற்புரையும், திரு. அ. இரத்தினசபாபதிச் செட்டியார் நன்றியுரையும் நவின்றார்கள்.

9—7—61 காலையில் குழுவினர் வேடப்பர் என்ற முருகனைத் தரிசித்து திருநெல்வாயிலரத்துறை சென்று வழிபட்டனர். அக்கோயில் அறங்காவலர்களும், ஊர்ப்பொதுமக்களும், சிவாசாரியரும் குழுவினரைப் பூர்ணகும்பங்கொடுத்து வரவேற்று சுவாமி தரிசனம் செய்துவைத்தனர். வழிபாட்டின் பின்னர் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அத்தலத்தின் சிறப்பினையும், அத்திருக்கோயில் திருப்பணி செய்ய முன்னின்று பணியாற்றிய வழக்கறிஞர், திரு. அரங்கசாமிபிள்ளையின்

ஊக்கத்தையும், பணியில்கலந்துசெய்யாதவர்கள்பாவிகள்என்று அவ்வூர்த் தேவாரம் குறிப்பிடும் நிலையையும் எடுத்துரைத்தார்கள். திரு. சிங்காரவேலு தேசிகர் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். அத்திருக்கோயில் அறங்காவலர் திரு. திருஞான சம்பந்தம் பிள்ளை அவர்கள் அவரது இல்லத்தில் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். பிறகு இறையூர் என வழங்கும் மாறன்பாடிக்குச் சென்று திருஞானசம்பந்தருக்கும் அவரது அடியார்கட்கும் சோறும் நீரும் அளித்து தாகந்தீர்த்த ஈசர் எழுந்தருளியுள்ள ஆலயத்தையும் வழிபட்டனர். அக்கோயில் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரி திரு. நடராஜன், கிராமமுன்சீப் திரு. முருகேசம் பிள்ளை, மற்றும் ஊர்ப்போது மக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர்.

பின்னர் பெண்ணாகடத்திற்குச் சென்று திருத்தூங்கானை மாடத்திறைவனைத் தொழுது வலம் வந்தனர். அக்கோயில் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரியும், திரு. சிவ. பழமலைப் பிள்ளை முதலிய ஊர்ப்பெருமக்களும், பொதுமக்கள் பலரும் குழுவினரை அன்போடு வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நிகழ்த்திவைத்தனர். வழிபாட்டின் பின்னர் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் திருமதி. இராஜரத்தினம் அம்மையார் அவர்கள் வருங்கால இளைஞர்கள் வாழவேண்டிய நெறி முறை பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். நிகழ்த்துகையில் அன்றாடத் தேவைகளையே மனிதன் முக்கியமானதாகக் கருதுகிறான். அவ்வாறு எண்ணுதல் பகுத்தறிவில்லாத உயிர்கட்குப் பொருத்தமானதுதான். ஆனால் பகுத்தறிவோடு கூடிய மனிதன் அவ்வாறு எண்ணுதல் வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எப்படிக் கெடுமோ அப்படியாகிவிடும். அறிவுநலமுள்ளவர்கள் தெய்வநம்பிக்கையாலும், பலத்தாலும் வாழ்க்கையைச் செப்பஞ்செய்துகொள்ள முன்வருதல்வேண்டும். அதுவே அறிவுடைமைஎன்று அறிவுறுத்தினார். ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் திரு. சிவபழமலைப்பிள்ளை வேண்டுகோட்படி சமயப் பேரவையைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் ஊர்ப்பொதுமக்களும். கோயில் பணியாளர்களும் வாரத்திற்கு ஒருநாளேனும் கோயிலில் முறையாக வழிபடவேண்டும் என்றும், வழிபாட்டின் பின்னர், சமய இலக்கியங்கள், திருக்

கோயில் வரலாறுகள், கோயில் வளர்த்த கலைகள் என்பன வற்றுள் ஏதேனும் ஒன்றுபற்றி விரிவுரை நிகழ்த்தவேண்டும் என்றும், அவ்வாறு நிகழ்த்துவதால் வழிபாடு பெருகி வளமும் நாட்டில் பெருகும் என்றும், அதற்கு இச்சமயப் பேரவையைப் பயன்படுத்துதல் இத்தல மக்களின் தலையாய கடன் என்றும் குறிப்பிட்டார்கள். சிவபழமலைப்பிள்ளை நன்றி நவின்றார்கள்.

பிறகு சந்தானாசாரியர்களுள்முதல்வராகிய ஸ்ரீமெய்கண்டார் அவதரித்த அச்சுதகளப்பாளர்மேட்டில் திருக்கோயில்கொண் டுள்ள ஸ்ரீ மெய்கண்டதேவரைக் குழுவினர் சிவஞானபோத சூத்திரங்களை ஓதி வழிபட்டனர். சிவஞானபோதக் கருத்துக்களை வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விளக்கினார்கள். வக்கீல் அரங்கசாமிப்பிள்ளை வரவேற் புரை கூறினார்கள். வக்கீல் அரங்கசாமிப்பிள்ளை, மிராசுதார் சிவராமசேதுப்பிள்ளை, சிவபழமலைப்பிள்ளை ஆகியோர் குழு வினருக்கு மாகேசுவரபூசை செய்து உபசரித்தார்கள்.

பிறகு குழுவினர் உளுந்தூர்ப்பேட்டைக்கு அண்மையில் உள்ள திருநெல்வெண்ணெய்க்குச் செல்லும் வழியில் உள்ள ஆதனூரை அடைந்தனர். அவ்வூர் மிராசுதார் திரு. சௌரி ராஜலுநாயுடு அவர்கள் இல்லத்தில் அவர்களது காரியஸ்தர்கள் குழுவினரை வரவேற்று சிற்றுண்டி அளித்து உபசரித்ததுடன் அங்கிருந்து திருநெல்வெண்ணெய்க்குக் கார்செல்லாதாகையால் அதற்கு டிராக்டர் டிரெயிலர் ஏற்பாடு செய்து உதவினர். அவ் வுதவியுடன் திருநெல்வெண்ணெய் சென்று வழிபாட்டைச் சிறப்பாக நிகழ்த்தினர். வழிபாட்டின் முன்னர் ஆதனூரில் அவ்வூர் கிராமப் பொதுமக்கட்கு வழிபாட்டின் அவசியம்பற்றி வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

வழிபாடு முடிந்தபின்னர் திருநெல்வெண்ணெய்க்கோயில் மண்டபத்தில் திரு. N. T. கிருஷ்ணசாமி M. A., B. T., அவர்கள் அங்குக் கூடியிருந்த மக்கட்குப் பாடல்பெற்ற கோயில்களின் சிறப்பை எடுத்துக்கூறி அத்தலத்தின் சிறப்பையும், தேவாரத் தின் பெருமையையும் விளக்கிக் கூறினார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மண், நீர், தீ, ஆகாயம், காற்று ஆகிய ஐம்பூதங்களும் இன்றி உயிர் இனம் - மனித இனம் வாழமுடியாதென்றும், நமது வாழ்விற்கு

அடிப்படையான அவற்றை எந்த அரசாங்கமும் உண்டுபண்ண வில்லை என்றும், அவற்றை நமக்கு உபசரிப்பவன் ஆண்டவன் என்றும் நம்மிடம் எதனையும் எதிர்பாராமல் இவற்றை உதவிய அவ்விறைவனை வழிபடாது மறப்பது செய்நன்றிகொன்றதாகு மென்றும், நன்றியறிதலாகிய வழிபாட்டைச் செய்வதால் நாம் நாள்தோறும் உயர்ந்து நலம் பெறுவோம் என்றும், எனவேதான் மக்களாகிய நாம் நாள்தோறும் வழிபாடு செய்யவேண்டுமென்று பெரியோர்கள் வற்புறுத்தியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்கள். இத்தல வழிபாடுகளில் உதவிபுரிந்த பெருமக்கள், பொதுமக்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்கள். இத் தலயாத்திரை வழிபாடுகள் சிறப்பாக நடப்பதற்கு ஆங்காங்கும் முன்கூட்டியே அறிவித்தும் விருத்தாசலத்தில் தங்குவதற்கு இடவசதியளித்த தோடு மாகேசுவரபூசை செய்வித்தும் சிற்றுண்டியளித்தும் உபசரித்த தேவார பாடசாலை உரிமையாளர் திரு. அ. இரத்தின சபாபதி செட்டியாரவர்கட்கு நன்றி தெரிவித்தார்கள். ஒவ்வொரு தலத்திலும் அவ்வத் தலத் தேவாரப் பதிகங்களை வழிபாட்டின் போது நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. P. சுவாமி நாதன் அவர்கள் இசையோடு ஓதி இறைவழிபாட்டைச் சிறப்பித் தார்கள். வழிபாடு நிகழ்த்திய அவ்வத்தலத் தேவாரப் பதிகங் களை வழிபாட்டு அன்பர்கட்கு அன்பளிப்பாக அச்சிட்டுவழங்கிய மேயர் கம்பெனி R. மாசிலாமணி முதலியாரவர்கட்கு குழுவினர் சார்பில் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

ஆகஸ்டு மாதம் 12 13 ஆம் தேதி சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களிலும், திருப்பாதிரிப்புலியூர் திருமாணகுழி, திரு வடுகூர், திருத்திணைநகர், திருச்சோபுரம் ஆகிய ஐந்து தலங் களிலும் வழிபாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மாணிக்கவாசகர் குருபூசை விழா

19—6—61 மாலை 7 மணிக்குச் சமயப்பிரசார நிலையத்தில் மாணிக்கவாசகர் குருபூசைவிழா மிக்க சிறப்புடன் கொண்டாடப் பட்டது. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். அவர்கள் தலைமையுரையில் காயத்ரி முதலான மந்திரங்கள் குறிப்பிட்ட உருவங்களின் முன்னர் உச்சரிக்கவேண்டுமென்று வழியுளது

என்றும், பஞ்சாக்ஷர மந்திரம் எந்தக்காலத்திலும் எந்த உருவத்தின் முன்னரும் உச்சரிக்கலாம் என்றும், இதனால் ஐந்தெழுத்தின் சிறப்பு தெளிவாகிறதென்றும். அவ்வைந்தெழுத்தைத் தீக்ஷை பெற்றுக்கொண்டு உச்சரிப்பதே சிறந்த பலனைத்தரும் என்றும் அருளினார்கள். சுகப்பிரமம். ஸ்ரீ இராமசாமி சாஸ்திரிகள் ''கந்தர் வரலாறு''பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள். வித்துவான். திரு. S. ஞானப் பிரகாசம் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா

சென்னை தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயத்தில் 21—7—61 ஆடிச் சுவாதி நன்னாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. காலையில் சுந்தரர்வரலாற்றுப் புராண படனமும் வழிபாடும் நிகழ்த்தப்பெற்றது. மாலை வித்துவான். திரு. எஸ். ஞானப்பிரகாசம், தேவார இசைமணி, திரு. வி. இலக்குமணன் ஆகிய இருவரும் சுந்தரர் அருளிய அற்புதத் தேவாரப் பதிகங்களை இசையோடு பாராயணம் செய்தனர். திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் எம். எல். சி. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். ஆண்டவன் அருளைப் பெற்ற திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சைவசமயத்தின் இருபெருந்தலைவர்களாயிருந்தும் தம்முள் வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையோடு சைவநெறியைப் பரப்பினார்கள் என்றும், அவர்கட்கு ஒரு நூற்றாண்டு பின்னர்த் தோன்றிய சுந்தரர் அவ்விருவரையும் தமது தலைவராகப் பெருமதிப்பு வைத்துப் போற்றியுள்ளார் என்றும், இவ்வாசிரியர்கள் நடந்து காட்டியுள்ள முறையை நாம் கடைப்பிடித்துஒழுகுவதே சைவத்தையும், சைவாசாரியர்களையும் போற்றுவதாகுமென்றும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ''சுந்தரரும் திருக்கேதாரமும்'' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவர்கள் பேசுகையில் அப்பர் கெஞ்சிப் பாடுபவர், சம்பந்தர் கொஞ்சிப் பாடுவர்; சுந்தரர் கெஞ்சியும் கொஞ்சியும் பாடுவதோடு, மிஞ்சியும் பாடுவார் என்று தக்க மேற்கோள் காட்டி விளக்கினார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்

வரவேற்புரையும், நன்றியுரையும் கூறும்போது சைவத் திருத்தொண்டர்களையும், சைவ ஆசாரியர்களையும், சைவ உலகிற்கு முதற்கண் எடுத்துக் கூறியவர் சுந்தரர் என்றும், இப் பேருதவியைச் செய்த சுந்தரரைத் தமது சைவகுல தெய்வமென்று மாதவச்சிவஞானசுவாமிகள் போற்றியுள்ளார்கள் என்றும், நமது ஜீவபோதத்தைக் கொண்டு சிவபோதமுற்றுப் பாடியருளிய தேவார திருவாசகங்கட்கு ஆராய்ச்சி நிகழ்த்துவது பெருந்தவறு என்றும் குறிப்பிட்டார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீகாசி, திருக்கேதாரம் முதலிய தலங்களைத் தரிசித்துப் பெற்றருளிய திருவருட் பிரசாதமும், நிலையத்தாரின் நடுநாட்டுத் தலயாத்திரைப் பிரசாதமும் அன்பர்கட்கு வழங்கப்பட்டன. சுந்தரர் வரலாற்றுத் துண்டுப்பிரசுரம் அனைவருக்கும் வழங்கப்பட்டன. சமயாசாரியர் நால்வரின் படம் பலரும் விழாப்பந்தலில் விலைக்குப் பெற்றுக்கொண்டனர். திரு. எஸ். ஞானப்பிரகாசம் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

தில்லித்தமிழரின் நன்றி

30—7—61 ஞாயிறன்று தில்லித் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் டாக்டர் பா. நடராஜன் அவர்கள் தலைமையில் கூடிய தமிழ்ச்சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:— தமிழும், சைவமும் வளர்க்கும் திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 25-ஆவது குருமகாசந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைநகருக்கு எழுந்தருளியபோது சங்கம் அளித்த வரவேற்பை ஏற்று நல்லாசி வழங்கியதற்கு இச்சங்கம் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் தலைநகரில் தமிழ்ச் சங்கத்திற்குத் தனிப்பட ஒரு மாளிகை வேண்டுமென்ற வாழ்த்துக்கூறி அதற்கு ஆதீன நன்கொடையாக 1001 வெண்பொற்காசுகள் வழங்கியதற்கும் மாளிகை எழுப்புவதற்கு மற்றையோரும் உதவ வேண்டுமென்று பரிந்துரை வழங்கியதற்கும் இச்சங்கம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது. குருமகாசந்நிதானத்தின் நல்லாசியின் துணைக்கொண்டும் அன்பர்கள் உதவி கொண்டும் இயன்ற விரைவில் மாளிகையைக் கட்டுவதற்கான முயற்சிகளை ஒல்லும் வகையிலெல்லாம் இச்சங்கம் முயற்சி செய்யும்.

எதிர்காலம் ☞ கே. முத்துஜோதிடர்

(பிலவஞுல ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—61 முதல் 16—9—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். நஷ்டமான பொருள் வரத்தும், கிரயவிக்ரய லாபங்களும், சுபசோபனுதி மங்கள காரியங்களும் நடைபெறும். ஆரோக்கியம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். வெள்ளி, புதன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீர்ஷம் ½.

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும், ரோஹிணி முதல்பாதமும் சுபமாகும். தொழில் ஓங்கும், அடிக்கடி ஸஞ்சார பலன் ஏற்படச் செய்யும். ரோஹிணி 2, 3, 4 பாதங்களும் மிருகசீர்ஷம் 1, 2 பாதங்களும் வீண் அலேச்சல், அதிக விரயம், காரிய தாமதம் முதலியவைகளைக் கொடுக்கும். பூர்ண சுபமிராது. வெள்ளி, வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீர்ஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும், புனர்பூசம் முதல்பாதமும் சுபத்தைத் தரும். தொழில் ஓங்கும். ஆரோக்கியத்தையும் உலக பிரசித்தியையும் உண்டு பண்ணும். நூதன முறையில் ஜீவன லாபம் கிட்டும். புனர்பூசம் 2, 3 பாதங்கள் பூர்ணசுபமிராது. வீண் அலேச்சல்களேயும், காரிய விக்னங்களேயும், வீண் செலவினங்களேயும் அதிகப் படுத்தும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வித்யாவிருத்தி, தனவிருத்தி, தொழில் பெருக்கம், நஷ்டமானபொருள் வரத்து,

ஸ்திர சுகவாசங்கள், தெய்வீகத்தன்மை தோன்றல், அரசாங்க மூலமான அனுகூலங்கள் எல்லாம் சித்திக்கும்; சந்தோஷம் உண்டுபண்ணும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும், பூரம் 1, 2 பாதங்களும் என்றும் கண்டிராத மகத்தான சந்தோஷத்தைத்தந்து எதிர்பாராத மேல் பதவிகளையும் தரும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டச்செய்யும். ஆரோக்கியத்தைத்தரும். சுப்சோபனுதி மங்கள காரியங்களையும் தரும். பூரம் 3, 4 பாதங்களும், உத்திரம் முதல் பாதமும் ஆரோக்கியக் குறைவையும், பந்து மித்திராளுடைய விரோதங்களையும் உண்டுபண்ணும். மனம் சாந்தி அடையாது. புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3 4 பாதங்கள் மிச்ரமான பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படச்செய்யும். தூரதேசத்திலிருந்து பிரியமான வார்த்தைகளைக் கேட்கச்செய்யும். ஹஸ்தம் 4 பாதங்களும், சித்திரை 1, 2 பாதங்களும் சுபமாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். அடிக்கடி தெய்வீகத் தோற்றம் உண்டாகும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். ஈதிபாதைகள் விலகும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். இராஜாங்கமூலமாக ஜெயம் உண்டாகும். ஆரோக்கியத்தைத்தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். ஆரோக்கியத்தைத்தரும். உலக பிரசித்தி ஏற்படச் செய்யும். மேலோர்கள் பெரியோர்கள் அன்பும், தெய்வீகத் தன்மையும் ஓங்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விசாகம் நான்காம் பாதமும், அனுஷம் 4 பாதங்களும் அடிக்கடி இடம் மாறுதலைக் கொடுக்கும. ஈதிபாதைகள் அதிக மாகும். தன்னிஷ்டப்படி நடக்கச்செய்யாது. கேட்டை நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்கியம் உண்டாகும். உத்தியோக உயர்வைத்தரும். தெய்வபலம் முன்னிற்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் மிச்ரபலனைத்தரும். கவலை யோடு காலம் ஓடும். ஆனாலும் குடும்பம் ஏற்றத்துக்குரிய சுப சூசனைகள் ஏற்படச்செய்யும். பூராடம் நான்கு பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் புத்ராதிகளால் மேன்மை உண்டு பண்ணும். வியாதி சாந்தி ஏற்படும். ஈதிபாதைகள் விலகும். கிரயவிக்கிரயங்கள் லாபகரத்தோடு உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மகாராஜயோக சுகபோகங் களைத் தரும். எக்காலத்திலும் எதிர்பார்த்து நடக்குமா என்று யோஜிக்கக்கூடிய காரியங்கள் எல்லாம் தானாக ஜெயத்தோடு வந்துசேரும். லாபத்தைத் தரும். இடம் மாறும். மேல் பதவிகள் கிடைக்கும். ஆரோக்கியம் உண்டாகும். சுபாதிகள் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

11 கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் ஆரோக்கியத்தைத் தரும். ஆடை ஆபரணங்கள் சேரும். இல்லற சுகம் ஓங்கும். சதயம் நான்கு பாதங்களும் இடம் மாறச்செய்து சுபத்தை உண்டு பண்ணும். தூரதேச பிரயாணம் கிட்டும். தொழில் ஓங்கும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் ஸ்தாவர ஜங்கம சொத்துக் களைத் தந்து கிரக சுகத்தைப் பூர்ணமாகத் தரும். நினைத்த தெல்லாம் கைகூடும். மங்களம் உண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தொழில் ஓங்கும். நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும். லாபகரத்தோடு கிரய விக்கிரயங்கள் ஏற்படச்செய்யும். எங்கும் கீர்த்தியும், பிரதாபமும் ஏற்படச்செய்யும். மேலோர், பெரியோர் அன்பு கிடைக்கும். சுபாதிகள் ஏற்படும். சந்தோஷம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி ஆவணி மாதம் இயற்கைகள் சரியாக இராமல் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமான குழப்பங்களை உண்டுபண்ணும். எங்கும் தலைமையாய் உள்ளவர்களுக்கு எதிலும் கவலை காட்டும். மேற்படி மாதம் முதல் மேற்படி வருஷம் பங்குனி மாதம் முடிய ஒவ்வொரு மாதமும் புண்ணிய க்ஷேத்திரங்களிலும், மகாநதீ தீரங்களிலும் மகாஜனங்கள் ஒன்று சேர்ந்து ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவ விஷ்ணு ஆலயங்களில் விசேஷமான ஆராதனைகளும், மகாயக்ஞங்களும் சிரத்தாபக்தியோடும், பூர்ண நம்பிக்கையோடும் சகல பாரத்தையும் கடவுளிடம் ஒப்புவைத்துவிட்டு ஒவ்வொருவரும் நமது கடமை என்று மேல்கண்டபடி நடத்திக்கொண்டுவர சகலமான துரிதங்களும் விலகி மகாஜனங்கள் சுபிக்ஷமாயும், சந்தோஷமாயும் இருந்துகொண்டு சந்தோஷம் அடைவார்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

During this second visit of mine (first being on 24—12—60) I am able to realise the grand bliss even more.

Sd. V. V. Radhakrishnan
Regional Transport Officer, Thanjavur.

29—5—61.